# வாக்கும் ஆட்சியும்

S. திருநாவுக்கரசு, M.A., L.T.

டி.வி.செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ், சென்னை.

# வாக்கும் ஆட்சியும்

எஸ். திருநாவுக்கரசு M. A. L. T.,
இயற்றியது

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்
2, பிலிப்ஸ் தெரு, சென்னை—1.

காப்பிரைட் ரிஜிஸ்தர் செய்தது] விலை அணு 12.

முதற் பதிப்பு

1953

டி. வி. எ. பிரஸ்

# முன்னுரை

"வாழ்வார்க்கு வாக்கு வாயினில்" என்பது ஒரு பழமொழி. ஆட்சி, நீதி, அலுவல் எல்லாத் துறைகட்கும் இது முற்றும் பொருந்தும். தனி யொருவர் தம் மனம் போன போக்கில் எதையும் செய்வதைவிடப் பலர் கருத்தை அறிந்து அவர்கள் வாக்குப் பெற்றுச் செய்தல் நல முடைத்தாம். இத னையே மக்களின் வாக்குரிமை என்பர். இவ்வுரிமை யைப்பெறமேனாட்டு மக்கள் பற்பல நூற்றாண்டு கள் போராடி வந்திருக்கின்றனர். நம் நாட்டிலும் தொடர்ந்த போராட்டத்தின் பயனாகவே நாம் வாக் குரிமை பெற்றோம். அண்ணல் காந்தியடிகளின் அறப்போர்முறையின் வெற்றியும், பெருமையும், பயனும் நம் நாட்டின் வாக்குரிமைதனி சிறப்பாகும்.

இவற்றை யெல்லாம் ஓரளவு இச் சிறு நூல் விளக்குகின்றது. சாதாரணப் பொதுத் தேர்தல் முறைக்கும் ஒற்றை மாற்று வாக்குத் தேர்தல் முறைக்கும் உள்ள வேற்றுமைகள் மாணவர்கட்கும், பிறர்க்கும் விளங்க வேண்டுவது நலமாம். எனவே ஒற்றை மாற்று வாக்கின் தன்மைகள் பற்றி இந் நூலில் ஒருசில கூறப் பெற்றுள்ளன. நூலின் அளவு கருதியும், விரிவஞ்சியும், ஒற்றை மாற்று வாக்குத் தேர்தல் முறையின் தன்மைகள்எல்லாவற் றையும் விவரிக்காது விடுத்தனம்.

உயர்தரப் பள்ளிகளில் மேல் வகுப்புகளில் பயிலும் மாணவர்கட்கு இது ஒரு சிறந்த துணைத் தமிழ் பாட நூலாகப் பயன் பெறும் என்பது திண் ணம்.

ஆக்கியோன்.

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வாக்கின் தொன்மை | .... | 1 |
| 2. | வாக்கின் தோற்றம் | .... | 3 |
| 3. | வாக்கு முறை | .... | 7 |
| 4. | மந்திரி சபைகள் | .... | 11 |
| 5. | பழங்காலத்திய ஒரு தேர்தல் | .... | 16 |
| 6. | பழங்கால வழக்குத் தீர்ப்பு ஒன்று | .... | 20 |
| 7. | வழக்குரிமை போராட்டம் | .... | 23 |
| 8. | நம் நாட்டு வாக்குரிமைப் போர் | .... | 42 |
| 9. | நம் குடியரசு | .... | 78 |
| 10. | ஒற்றை மாற்று வாக்கு | .... | 82 |
| 11. | முடிவுரை | ... | 86 |

# 1. வாக்கின் தொன்மை

*வாக்கின் தொன்மை*

மக்கள் வாக்குப்படி அரசாட்சி நடைபெறுவது என்பது நம்முடைய நாட்டுக்குப் புதியதல்ல. பழங்கால முதல் குடிமக்களின் ஆலோசனைப்படியேதான் அரச காரியங்களும், அரசாட்சியும் நடைபெற்று வந்திருக்கின்றன. மற்ற நாடுகளில், நாகரிகம், அமையாக் கால முதலே, நம் இந்திய நாட்டில் மக்களின் வாழ்க்கை முறை சீர்பெற்று இருந்து வந்துள்ளது. அதன் சிகரமாக மக்களைக் கலந்து நடத்தும் ஆட்சிமுறை அமைந்திருந்தது. இந்த வரலாறுகளை நாம் பழைய நூல்களில் காணலாகும்.

மக்கள் ஆட்சி ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு முறையில் ஏற்பட்டிருந்தது. அதன் முறை, அமைப்பு, நோக்கம், எல்லை முதலியன பற்பலவாக ஏற்பட்டிருந்தாலும், ஆளப் பெறுவோர் ஆட்சியில் கலந்துகொள்ளுதல் என்ற உயர்ந்த உரிமை நோக்கம்தான் ஆட்சியின் அடிப்படையாக அமைந்திருந்தது.

அந்த முறையில்தான் இன்று ஆட்சி விரிவாக வகுக்கப் பெற்று நடைபெறுகின்றது. தம்முடைய அரசியலைத் தமக்காகத் தாங்களே அமைப்பது என்பது

குடியரசு

இம்முறைதான். நம் நாட்டில் மட்டுமன்று; உலக நாடுகள் பலவற்றிலும் நடைபெறுவதாக இருக்கும் குடியாட்சிகள் எல்லாம் இந்தக் கொள்கையைத்தான் அடிப்படையாகக் கொண்டவை. ஆள்வோர், ஆளப்பெறுவோர் என்ற வேற்றுமையின்றி அமையும் அரசியல்தான் முழு வெற்றிகரமாக நடைபெறும் என்பது வரலாறு கண்ட துணிபு.

இவ்வாறு மக்களின் மனமறிந்து நடைபெற்ற அரசியல்கள் சீரும், சிறப்புமாக நடைபெற்றிருக்கின்றன.

வாக்கின் சிறப்பு

அரசியல் முறைகளில் ஏற்படும் காரியங்கள் பற்றி மக்கள் தங்கள் மனக்கருத்தை வெளியிடுவதை "வாக்களித்தல்" எனலாம். "வாக்கு" என்ற சொல் உயர்ந்த ஒரு பொருளைக் கொண்டது. வாக்கு என்பது "சிறந்த உறுதி பெற்ற சொல்"; "மெய்யான சொல்"; "மாருச் சொல்"; "சத்திய வார்த்தை" என்றெல்லாம் பொருள் பெறும். "வாக்களித்தல்" என்ருல் "உறுதி சொல்லுதல்" என்பது தான் பொருள். "வாக்கு" பொய்க்கக் கூடாதது; என்றும் நிலைத்திருக்க வேண்டுவது; சோதனைகளால் தளரக் கூடாதது. அது எதிரிகளையும்கூடக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மையும், வன்மையும், தூய்மையும் உடையதாக இருத்தல் வேண்டும். தனி மனிதனின் ஒரு வாக்குக்கு இத்தகைய சிறப்பு உண்டு என்ருல் மக்கள் பலருடைய வாக்கு எவ்வளவு வன்மையும் மேன்மையும் பெற்றதாகும்!

இத்தகைய வன்மையும் மேன்மையும் கொண்ட வாக்கையுடைய மக்களின் இன வாழ்க்கையும் அரசியலும் எவ்வளவு உயர்ந்தனவாகும்!

# 2. வாக்கின் தோற்றம்

முற் காலத்திலிருந்தே எந்த ஒரு காரியத்தையும் "நாலு பேரை"க் கலந்து செய்தல் என்பது நம் நாட்டுப் பெரு வழக்கம். கற்றவர்களும் மற்றவர்களும் இம்முறையையே பின்பற்றி வந்திருக்கின்றனர். தாமே எண்ணித் துணிவதோடு பிறர் எண்ணத்தையும் அறிதல் நலமுடையது என்பது நம் முன்னேர் கண்ட துணிபும் முறையுமாம். தனி மனிதன் ஒருவன் தன் அறிவு வளத்தால், கல்வி மிகுதியால், உடல் வன்மையால், செல்வச் சிறப்பால், படை பலத்தால், தான் நினைத்ததைச் செய்து முடிக்க முயல்வது சரியானதாகாது. இது பற்றியே "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்ற கோட்பாடு எழுந்தது. தனி மனிதன் தன் ஒரு நோக்கின்படியே எதையும் நடத்த முயல்வான். ஆனல் பிறரிடம் தன் மனதைக் கூறித் தன் திட்டங்களையும், எண்ணத்தையும் ஆராயப் புகுந்தால், தான் நினைப்பதில் உள்ள குறைபாடுகள் தோன்றும். அந்த எண்ணத்தைப் பற்றிப் பிறர் கருத்துக்களையும் நோக்கி அதனை நிறைவுள்ளதாகச் செய்து கொள்ளலாம். பலர் அறியத் தன் எண்ணத்தைச் சொல்லும் பொழுதும், அதனைப் பலர் அறியும் பொழுதும், தன் எண்ணமும் திட்டமும் உயர்ந்தனவாகவும் சிறந்தனவாகவும் இருக்கப் பார்க்கின்ருன். ஆதலால் அதனைத் தானே பண்படுத்துகின்ருன். அதோடு அதனைப் பிறர் ஆராயுங்கால் ஆராய்பவருடைய, அனுபவம், அறிவு, ஆற்றல் எல்லாம் ஒருங்கே அதைப் பண்படுத்துகின்றன. எனவே பிறரைக் கலந்து தீர எண்ணிப்,

*பிறர் கருத்தறிதல்*

பார்த்துச் செய்வனவெல்லாம் பொதுநல நோக்கமும், தன்னல நீக்கமும், தூய்மையும், செயல்வகை எளிமையும் உடையனவாகும்.

“நல்லவர்கள் நாலு பேர்” ஒப்புக்கொண்டது உயர் வானதாகும்.

மிகப் பழைய காலத்தே இந்தப் பழக்கம் தோன்றி யிருந்தது. சிறு குடும்ப நிகழ்ச்சி முதல் ஊர்களின் பொதுக் காரியங்கள், தேச காரியங்கள், வழக்குத் தீர்ப்பு கள், படை திரட்டல், வரி விதித்தல் முதலான பெரிய அரச காரியங்கள் வரை யில் பலர் ஆலோசனைப்படியேதான் நடந்திருக்கின்றன.

*குடும்பம்*

நம் நாட்டு மக்கள் ஆதிகாலத்தில் பல குடும்பங் களாகப் பிரிந்து ஒரு தலைவனுக்குட்பட்டு வாழ்ந்தனர். அக்காலத்துக் குடும்பத் தலைவர்கள் கூடி ஓர் ஊர்த் தலை வனை அமர்த்துவார்கள். அத் தலைவன், ஊர்க் காரியங் களைச் செய்யும்பொழுது குடும்பத் தலைவர்களைக் கலந்து கொண்டு, அவர்கள் வாக்குப்படியேதான் அனைத்தையும் செய்வான்.

இவ்வாறு ஏற்பட்டதே ஆதிகால அரசு. ஆட்சியில் அனுபவம் பெற்ற குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக எல்லோரையும் ஆளும் உரிமை பெற் றனர். ஆயினும் அவர்கள் தாமாகவே தம் மனப்படி எது ஒன்றையும் செய்ததில்லை. கடவுள் வழிபாடு, மக்களுடைய பொது நலத்துக்கான திட்டங்கள், வேளாண்மை, வரி விதிப்பு, போர்மேற்செல்லல் முதலிய அனைத்தும் மக்கள் ஆலோ சனைப்படியே நடைபெற்று வந்தன.

*ஆதிகால அரசு*

நேர்முகமாக மக்கள் அனைவரையும் கூட்டி அவர்கள் மனமறிந்து வாக்குப் பெறுதல் இயலாதபொழுது

ஒற்று

அமைச்சர்கள் மூலமும், ஒற்றர்கள் மூலமும் மக்களின் மனதையறிதல் பெரு வழக்கமாயிருந்தது. அக்கால அரசர்கள் இராப் பொழுதில் மாறு வேடமணிந்து நகர்சோதனைக்குப் போதலும், தன் ஆட்சி முறைகள் பற்றி ஒவ்வொரு தனி மனிதனும் என்ன "வாக்களிக்கின்றான்" என்பதனை அறியவே யாகும். இத்தகைய நகர் சோதனைகளில் அறியக் கிடக்கும் செய்திகட்கு ஏற்றவாறு அரசன் தன் ஆட்சி முறையையும், செயல்களையும் சீர்படுத்திக் கொள்வது என்பது மரபு.

ஒரு தனி மனிதனுடைய தனிப்பட்ட ஒரு வாக்குக்கும் அரசர்கள் எவ்வளவு உயர்வு கொடுத்திருக்கின்றார்கள் என்பதற்கு இரு சான்றுகள். பாண்டியன் ஒருவன் நகர் சோதனை வருகின்றான். ஒரு வீட்டில் தலைவனும் தலைவியும்

நகர் சோதனை

பேசுகின்றார்கள். அரசன் மறைந்து நின்று கேட்கின்றான். தலைவன் பொருள் தேடப் பிரிகின்றதற்குத் தலைவி வருந்துகின்றாள். "என்னை நீர் தனியே விட்டுப் போனால், என்னை யார் காப்பது?" என்கின்றாள் தலைவி. அதற்குத் தலைவன் "அரசனது ஆணை காக்கும்", என்று கூறுகின்றான். இதனைக் கேட்ட பாண்டியன் இரவுதோறும் அவ்வீட்டைக் கண்காணிப்பதைத் தன் தனிக் கடமையாக ஏற்றுக்கொள்கின்றான்.

மற்றொரு பாண்டியன் இரவில் நகர் சோதனை வருகின்றான். புலவர் ஒருவர் குளிரால் வாடி வருந்துகின்றார். நாரை யொன்று வான வழியே பறந்து வருகின்றது. அதனைப் புலவர் விளித்து,

"நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும் நின் மனைவியும் தென்திசைக் குமரிஆடி
வடதிசைக்கு ஏகுவீர் ஆயின், எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு,
'எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே"

என்று கூறுகின்றார். பாண்டியன் இதனைக் கேட்டுக் கொண்டே போகிறான்.

மறுநாள் புலவரை அழைத்துச் சிறப்புச் செய்கின்றான்.

இத்தகைய சான்றுகள் பழந்தமிழ் வரலாறுகளில் பலப் பல. அரசர்கள் குடிமக்களின் மனநிலையை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அறிந்து குடிகள் வாக்குப்படியே தம்முடைய செயல்களைச் செய்திருக்கின்றனர் என்பதனை இவை நன்கு விளக்குகின்றன.

# 3. வாக்கு முறை

சிறு குடும்பம், அல்லது சிற்றூர்களில் பலரை யோசிக்க வேண்டுமானால் எல்லோரும் ஒருங்கே யிருந்து யோசிக்கலாகும். ஆயினும் முன்னாளில் நம்மவர்கள்,

ஆலோசனைக் குரியவர்

அங்கப் பழுதுடையவர், நோயாளிகள், சிறுவர்கள், முதலாயினோரை ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைத்ததில்லை. அவர்கட்கெல்லாம் மனநிலையும் அறிவு நிலையும் சிறப்பாக இருக்கமாட்டா என்ற காரணத்தாலும், சபைநடுவே நடந்துகொள்ளும் முறை அவர்கட்குத் தெரியாது, ஆதலானும் அவர்கட்கு ஆலோசனைக் கூட்டங்களில் இடம் அளிக்கவில்லை. இன்னும், கூட்டங்களில் நடைபெறும் ஆலோசனை முதலியவற்றை வேண்டாத இடங்களில் வெளியிடக்கூடிய நம்பகமற்றவர்களும் அனுமதி பெறார். பழங்காலத்தே பாண்டிய நாட்டிலே திருநெல்வேலியில் *மணநிலை நல்லூர் (மானூர்) என்னும் ஊரில் அம்பலவாணசுவாமி கோவிலில் பொறிக்கப் பெற்றுள்ள ஒரு ‡கல்வெட்டில் ஆலோசனைச் சபைக்கு வரக்கூடியவர்களுடைய தகுதிகள் விவரமாகக் குறிக்கப் பெற்றுள்ளன. போதிய ஆண்டு, கல்வி இவற்றுடன் ஊர் நிலப்பங்குகளில் முழுப் பகுதியும் உடையவர்களே ஊர்ச் சபைக் கூட்டங்களுக்கு வரத் தகுதி யுடையவர்கள். ஆலோசனைக் கூட்டத்திற்கு வருதற்குரியவர்களைப் பெருங்குறி என்னும் பறைசாற்றி குறிப்பிட்ட நேரத்தில் ஓர் இடத்திற்கு அழைப்

---

*Manur: ‡Manur Inscription of Maranjadayan by Prof. A. Nilakanta Sastri.

பது வழக்கம். கூட்டத்திற்கு வராதவர்களுக்குத் தண்டக் காசு விதிப்பதும் இதர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதும் அக்காலத்துப் பெருவழக்கம். கூட்டத்தார் செய்யும் தீர்மானத்துக்குக் ''கச்சம்'' எனப் பெயர். அத்தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பவர்கள் ''வாரியர்'' என்றழைக்கப் பெற்றனர். இந்த வாரியர்கட்குரிய தகுதிகளும், சொத்துப் பொருத்தமும், கடமைகளை நிறைவேற்றத் தவறுபவர்களுக்குத் தண்டங்களும், விவரமாகக் குறிக்கப் பெற்றுள்ளன. இந்தக் கல்வெட்டு ஒரு கிராமத் தன்னாட்சி முறையை நன்கு குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

தென்னாட்டில் இன்றும் ''அம்பலகாரர்'' என்றும் ''அம்பலக் கல்'' என்றும் சொற்கள் வழங்குகின்றன. ''அம்பலகாரர்'' என்ற சொல் 'அம்பலம்' என்ற சொல்லினடியாகப் பிறந்தது. ''அம்பலம்'' என்றால் 'பொது' அல்லது சபை எனப் பொருள். பொதுவைச் சேர்ந்தவர்கள் ''பொதுவர்'' அல்லது ''அம்பலகாரர்''. எனவே, ''அம்பலகாரர்'' என்றால் ''ஊர்ச்சபையார்'' என்பது பொருள். உதய மார்த்தாண்டன் என்னும் அரசரது காலத்துக் கொல்லூர் மடம் கல்வெட்டுக்கள், ஒரு ஆட்சிச் சபையின் நடைமுறை உறுப்பினர் தொகை முதலியவற்றை நன்கு குறிப்பிடுகின்றன. அதில் ''பொதுவல்'', ''பிள்ளைமார்'' என்னும் சொற்கள் சபை உறுப்பினர்களைக் குறிப்பனவாயுள்ளன. பொதுவல், அகப் பொதுவல், புறப் பொதுவல் என இரு பிரிவினராயினர்.

*கொல்லூர் மடம் கல்வெட்டு*

திருமுருகாற்றுப் படையில், ''புதுப் பூங்கடம்பும் மன்றமும் பொதியினும்'' என்பதில் மன்றம் என்பது மேற்

கூறிய அம்பலத்தைக் குறிப்பதாகும். எனவே, அம்பலகாரர் என்றால் மன்றத்தார், சபையார், என்றெல்லாம் பொருள்.

இத்தகைய ஊர் மன்றத்தின் தீர்மானத்திற்கும், நடவடிக்கைகட்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது ஊராருடைய கடமையாயிற்று. ஆதிநாளில் மொழியானது வரிவடிவம் பெறாத காலத்தில், தீர்மானங்கள் எல்லாம் ஆணைகளாக வாய்ச் சொற்களாலேயே உருப்பெற்றன. அவற்றை மக்கள் ஏற்றனர். பின்னர் எழுத்துத் தோன்றிய பின் இத்தீர்மானங்கள் எல்லாம் கற்களிலும், செப்பேடுகளிலும், ஆங்காங்குப் பொறிக்கப் பெற்றுச் சாசனங்கள் என்று பெயர் பெற்றன.

*சாசனங்கள்*

இந்தச் சபையினர், மானிடர் ஆலோசனைகட்கும் அப்பாற்பட்ட காரியங்களில் அல்லது சிக்கலான விவகாரங்களில் இறைவனுடைய திருவுள்ளத்தை அறிய ஏற்பாடு செய்வார்கள். அதாவது விஷய விவரங்களையும் அவற்றின் தீர்ப்புகளையும் தனித்தனி ஓலைச் சுருள்களில் எழுதிச், சுருள்களை ஒரு குடத்துக்குள் போட்டுக் குலுக்கி ஒரு ஓலைச் சுருளைக் குடத்துக்குள்ளிருந்து எடுக்கச் செய்வார்கள். பலர் முன்னிலையில் எடுக்கப் பெறும் அச்சுருள் பலருமறியப் படிக்கப் பெற்று எல்லோராலும் ஏற்கப் பெறும். இந்த ஓலைக்குக் "குடவோலை" எனப் பெயர். யாராவது தனிப்பட்ட ஒருவருடைய தீர்ப்பையும் முடிவையும் விடப் பலர் முன்னிலையில், பலருங் கண்டறியப் பொதுவான ஒரு சீட்டின் மூலம் ஏற்படும் தீர்ப்பு, தேர்வு, அல்லது முடிவு சிறந்ததாகும் என்பதை இம்முறை குறிக்கின்றது.

*குடவோலை*

ஊர்ப் பொதுச் சபையார் ஒரு மரத்தடியில் கல்லின் மேல் கூடுவார்கள். அந்தக் கல்லுக்கு "அம்பலக் கல்" என்று பெயர்.

இத்தகைய சபைகள் நாளடைவில் பல் வகையாகப் பெருகின. அரசனுக்கு ஆலோசனை கூறும் சபை, அந்த சபையினரின் முடிவுகளை நிறைவேற்றும் சபை, நாடு நகரங்களை ஆளும் சபை, கோவில்கள், அறக் கட்டளைகள், மானியங்கள், ஆகியவற்றைப் பரிபாலனம் செய்யும் சபைகள், நியாயம் வழங்கும் சபை எனப் பலவாகப் பெருகின.

*பல்வகைச் சபைகள்*

இவை எல்லாவற்றின் அடிப்படைக் கொள்கையும் பலர் வாக்கின் மதிப்பும், சிறப்புமேயாம்.

# 4. மந்திரிச் சபைகள்

முன்னாளில் அரசர்கள் தங்கள் காரியங்கள் ஒவ்வொன்றிலும் தங்கள் அமைச்சர்களையும் பிறரையும் கலந்து ஆலோசிப்பார்கள். அவர்கள் நல்வாக்குப் பெற்று எதனையும் செய்வார்கள்.

அயோத்தி அரசன் தசரதனுக்கு நரை தோன்றியது. அது அவனுடைய மூப்பை அவனுக்குப் புலப்படுத்தியது. அவன் தன் முடிச்சுமையைத் தன் முதல் மகன் இராமனுக்கு அளித்துத் தன் பிறவித்துயர் களைவதற்காக நோற்க எண்ணினான். இது தனிப்பட்ட ஒரு விருப்பம். அரசன் தன்னுடைய தனி உரிமையான அரசை தன் மூத்த பிள்ளைக்குப் பல்லாற்றானும் சிறப்பு நிறைந்த இராமனுக்கு கொடுக்க எண்ணுகிறான். இராமன் மூத்த பிள்ளை. பட்டத்தரசி கோசலையின் குமாரன். அவனுக்கே அரசு உரியது. அத்தகைய இராமனுக்குப் பட்டம் கட்டும் பெரிய தனி அரச காரியத்திலும் தசரதன் என்ன செய்கின்றான்! முதலில் தன் அமைச்சர்களை அழைக்கின்றான். தன்னுடைய எண்ணத்தைச் சொல்கின்றான். தான் நற்கதியடைய அவர்கள் துணைபுரிய வேண்டுமென்கிறான்; அரசன் தன் அமைச்சர்களிடம் கலந்து ஆலோசிப்பதை நோக்க, அவன் அமைச்சரின் ஆலோசனைகட்கு எத்துணைச் சிறப்புக் கொடுத்தான் என்பது புலனாகின்றது. இதனைக் கம்பர் தம் கவிகளில் சித்திரிக்கிறார்.

*அயோத்தி*

"உம்மையா னுடைமையால் உலகம் யாவையுஞ்
செம்மையி னோம்பிநல் லறமுஞ் செய்தனென்

இம்மையி னுதவி நல் லிசைந டாய நீ
ரம்மையு முதவுதற் கமைய வேண்டுமால்."

* * *

*இராமாயணச் சான்று*

‡ "ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதைமைத் தாய்வரு பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென வினைய கூறினன்."

* * * *

அமைச்சர்கள் நல்வாக்குக் கொடுக்கின்றனர். அடுத்தபடி தன்னை யொத்த அரசர்களை அழைக்கின்றான் மன்னன். அவர்களிடம் தன் எண்ணத்தைக் கூறு கின்றான். அதனைக் கேட்ட அரசர்கள் உவகை மிகுந்து மறுமொழி கூறுகின்றனர்:

‡ "தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையு
மானவ வெவையு நின்மகற்கு வைகுமா
லீனமில் செல்வம் வந்தியைக வென்னவே.

‡ "ஊருணி நிறையவும் உதவு மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்
கார் மழை பொழியவும் கழனி வாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின் றார்கள் யார் ?"

இவ்வாறெல்லாம் தன் மகனுக்கு முடிசூட்ட எண்ணிய தசரதன் பலருடைய நல்வாக்குப்படியே நடத்தல் நலம் என எண்ணுகின்றான்.

---

‡ கம்பராமாயணம்-அயோத்தியா காண்டம்-மந்திரப்படலம்.

அயோத்தி அரசுக்கு எதிராக அமைந்திருந்தது இலங்கையரசு. அங்கு இராவணன் அரசன். அவன் இராமனுடன் போர் புரிய எண்ணமிட்டான். அப்போது ன் அமைச்சர்களையும் பங்காளிகளையும் அழைத்து ஆலோசனை வேண்டினன். ஆனால் இலங்கை யமைச்சர்கள் அயோத்தி யமைச்சர்களைப் போன்றவ ரல்லர்.

*இலங்கை அரசு*

அயோத்தி அமைச்சர்கள்:

‡"தம்முயிர்க் குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் கால
மும்மையு முணர வல்லார், ஒருமையே மொழியும் நீரார்."

"நல்லவுந் தீயவு நாடி, நாயகற்
கெல்லையின் மருத்து வனியல்பின் எண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியில்
தொல்லைநல் வினையென உதவுஞ் சூழ்ச்சியர்."

* * * *

இலங்கை யமைச்சர்கள், இதற்கு மாறானவர்கள். தம்முடைய அரசன் சினத்துக்கு அஞ்சி அவன் மனம் உவக்கும் ஆலோசனையே கூறி, அவனையும் கெடுத்துத் தாமும் கெட்டுப்போகின்றவர்கள். ஆதலால் அவர் கள் போர் மேற்செல்லுதலையே சிறப்பித்து அரசன் மனம் மகிழ ஆலோசனை கூறினர். இரண்டு அரசு

‡ *கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம் - மந்திரப்படலம்.*

களிலும் ஆலோசனையின் பயன் யாதாயினும், நல்ல தற்கும், கெட்டதற்கும் "பிறரைக் கலத்தல்" என்பது தொன்று தொட்ட பழக்கம் என்பதைக் கம்பர் காட்டு கின்றார்.

அசோகர் காலம் தொட்டுக் குடிமக்களைக் கலந்து அரசகாரியங்களையும், மதக் காரியங்களையும் அரசன் நடத் துதல் என்ற பெரும் பழக்கம் நம் நாட்டில் நிலை பெற்றிருக் கின்றது. அசோகன், கனிஷ்கன், ஹர்ஷன், முதலிய அரசர்கள் அவ்வப்போதும் பல மதங்களைச் சேர்ந்தவர்களைக் கூட்டி மத சம்பந்தமாக, விசாரணைகள், ஆராய்ச்சிகள் செய்து, அங்குக் கூடிய அறிவாளிகளின் நல்வாக்குப்படியே மதக் காரியங்களைச் செய்தனர். அரசர்கள் என்ற முறையில் தாமாக எதனையும் செய்து முடிக்காது பிறர் ஆலோசனை யும் நல்வாக்கும் பெற்றுத்தான் செய்தார்கள்.

*மதச் சபைகள்*

தமிழ்நாட்டில் சோழ பாண்டிய அரசர் காலங்களில், நாடுகள் பல பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தன. அந்தந்தப் பிரிவுக்கும், தகுந்த அதிகாரி யிருந்தார். அதி காரிக்கு ஆலோசனை கூற அறிவாளிகளைக் கொண்ட சபைகள் இருந்தன. அந்நாளில் கிராமங்களில், ஐம் பேராயம், என்றும் என் பேராயம் என்றும் பெயருள்ள சபைகள் ஐந்து அல்லது எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஆலோ சனை சபைகளாம். இச் சபையார் அரசாட் சிக் காரியங்களில் ஆட்சியாளர்க்கு அவ்வப்போதும் வேண்டிய ஆலோசனை கூறிவந்தனர். அவர்கள் வாக்குப் பெற்றுத்தான் ஆட்சி முறைகள் அமைந்தன. ஊர்க் காவல், நீர்ப்பாசனம், சுங்கம் விதித்தல், வாணிபப்

*ஐம் பேராயம், எண் பேராயம்*

பெருக்கம், துறைமுக பரிபாலனம் முதலிய காரியங்கள் கூடத் தகுந்த சபையார் வசம் ஒப்புவிக்கப் பெற்றிருந்தன.

*அக்பர் காலம்*

அக்பர் காலத்தில் படை, வரிவிதிப்பு, நிலவரி, முதலான காரியங்களெல்லாம் அவ்வவற்றிற்கு ஏற்ற ஆலோசனைச் சபையோடு கூடிய அமைச்சர்கள் கவனித்து வந்தார்கள்.

*சிவாஜி-அஷ்டப் பிரதமர் சபை*

மராட்டிய மன்னரான சிவாஜியும் தம்முடைய ஆட்சியில் எட்டு அறிவாளிகள் கொண்ட எண்பேராயம் அல்லது 'அஷ்டப் பிரதமர் சபை" என்பதைக் கூட்டி அவர்களைக் கலந்து கொண்டேதான் ஆட்சியை நடத்தினர்.

## 5. பழங்காலத்திய ஒரு தேர்தல்

இங்கிலாந்தின் பழையகாலம் நாகரிகம் அடையாத காலம். மதமடங்களும், மடாதிபதிகளும் தங்கள் மனம் போல அனைத்தையும் செய்துவந்த காலம். எட்மண்ட்ஸ்பரி என்பது ஒரு மடம். அங்கு ஒருமடாதிபதி இறந்து விட்டார். மடத்தின் நிலைமை சீர்கேடாக விருந்தது. அன்றாட நடைமுறைச் செலவிற்கே பணமில்லை. மதக்காரியங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை. மடத்தில் இருந்த குருமார் களிடம் ஒழுங்கும், நெறியும் இல்லை. லௌகிக வாழ்க் கைக்கே அவர்களுடைய பொருளும் பொழுதும் பற்றாக் குறையாயிருந்தன. அங்கிலையில் மதமெங்கே! மதவிசா ரணை எங்கே! மதக்கல்வி யெங்கே! நெறியும் ஒழுக்க மும் தான் எங்கே!

*பழங்கால இங்கிலாந்து*

இங்கிலையில் புதிய மடாதிபதி ஒருவரைத் தேர்ந் தெடுக்க வேண்டும். எவரைத் தேர்ந்தெடுப்பது? வயதில் மிகுந்த ஒருவரையா? கல்வியில் பெரிவரையா? எவ்விதமான ஒருவரை நியமிப்பது? அங்கிருந்த குரு மார்கள் அனைவருக்கும் குழப்பம். மடத்தின் நிலையைச் சீர்செய்தாக வேண்டும். அதற்கு வன்மை, திறமை, சுயநல மின்மை என்பன நிறைந்த ஒருவர் மடத்தலைவரானால்தான் நலம். அத்தகைய ஒருவருக்கு வாக்களித்துத் தேர்ந்தெடுத்தால் அவர் கடுமையான ஒழுங்கு, சட்டதிட்டங்கள், முதலியன அமைப்பாரே! அவற்றிற்கு அடங்கி அல்லது அமைந்து நடக்கவேண்டு

*தலைவர் யோக்கி யதை*

மே! தாங்கள் அதுவரையில் தங்கள் மனம் போனவாறு நடந்ததுபோல நடந்துகொள்ள இயலாதே!

இவ்வாறாகக் குழப்பம். தக்கவரைத் தேர்ந்தெடுத்தால்தான் மடத்தின் நிலைமை திருந்தும். ஆனால் தக்கவரைத் தேர்ந்தெடுத்தால் தாங்கள் ஒழுங்குக்குக் கட்டுப்படவேண்டுமே என்று குருமார்கள் கலங்கினர்.

*குழப்பமும் கலக்கமும்*

மடத்தின் நிலைமை பின்னும் சீரழிந்தால் மடத்தாருடைய வாழ்க்கை பாழ்படும்; வறுமை மிகும். அறிவீனம், பசி, பிணி, பட்டினி என்பன மலியும். எனவே, அக்குறைகளை நீக்கவும் தடுக்கவும், ஒழுங்குக்கும், நெறிக்கும், உட்பட்டு நடப்பது செய்யக்கூடியதே. இவ்விதமாக எட்மண்ட்ஸ்பரி மடத்தார் எண்ணமிட்டனர்.

அவர்களுடைய நல்லறிவும் சமய உணர்வும், அவர்களுடைய தன்னலப்பற்றை மீறின. ஒழுங்கு, ஒழுக்கம், கடமை நெறி முதலியன கடுமையானவையாயினும் அவற்றிற்குட்பட்டு நடக்கவும், தங்களது தன்னலத்தை நீக்கி மடத்தின் நலத்தை நோக்கவும் துணிந்தனர். மடத்தின் பொருளாதார நிலை சீராகிப் பெருகவேண்டும். மடமானது ஒழுங்காக அதற்கு ஏற்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும். மதச்சடங்குகள், வழிபாடு, கல்வி போதனை, அனாதைகளையும் நோயாளிகளையும் ஆதரித்தல் முதலிய மட அறங்கள் நடைபெற வேண்டும். மடத்தாராகிய தாங்கள் தூய துறவிகளாக, உலகம் போற்ற வாழ வேண்டும். தாங்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் மடத்தலைவர் மூலம் தங்களது பண்பாடுகள் புலனாக

*கடமையறிவு மீறல்*

வேண்டும். வீரத்தன்மையும் தூய்மையும், தன்னல நீக்கமும், பொதுநல நோக்கமும் உடையவர்கள், அக் குணங்கள் படைத்த ஒரு வீரருக்கே தங்கள் வாக்குகளை அளித்துத் அவரைத் தங்கள் தலைவராக அல்லது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பார் கள். அவ்வாறில்லாத கயவர்கள் ஒரு கயவனுக்கே தங்கள் வாக்குகளை அளித்து அவனையே தேர்ந்தெடுப்பார்கள். ஓர் இனத் தார் தாங்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் ஒருவருடை பண்பாடுகளைக் கணக்கிட்டால், அந்த இனத்தாரின் பண்பாடுகளைக் கணக்கிட்டு அறிய இயல்வதாகும்.

*வாக்காளரும் தேர்தல் பெறுப வரும்*

ஆதலால் எட்மண்ட்ஸ்பரி மடத்தார், பலரைவிட ஆண்டில் இளைஞராயினும் தலைமைக்குரிய பொருத் தங்கள் பலவும் படைத்த [1]சாம்ஸன் என்னும் துறவிக்குத் தங்கள் வாக்குகளை அளித்து அவரைத் தலைவராகத் தேர்ந் தெடுத்தனர்.

*சாம்ஸன்அடிகள் தேர்தல்*

அத்தேர்தல்பற்றி மனக்குறை யடைந்தவர்களும் அங்கு அப்போது இல்லாமல் இல்லை.

சாம்ஸன் அடிகள் தலைவரானவுடன் அவர் செய்த சீர்திருத்தங்கள் பல. மடத்தின் பகுதிகள் பழுதுபார்க்கப் பெற்றன. சொத்துக்கள், கால்நடை முதலியன ஒழுங்காகக் கண்காணிக்கப் பெற்று நல்ல வருவாயைக் கொடுத்தன. மிகச் சுருங்கிய காலத்தில் மடத்தின் கடன்கள் தீர்ந்து செல்வ நிலை பெருகிற்று. மடத்து அறங்கள் செம்மையாக நடைபெறலாயின.

*சீர்திருத்தங்கள்*

---

[1] Samson

‡" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்பது பொய்யாமொழி.

எட்மண்ட்ஸ்பரி மடத்தார் பொதுநல நோக்கத்தைக் கைவிட்டு, தம்முடைய தனி நலத்தைக் கருதி, ஒழுங்கு, ஒழுக்கம், நெறி இவற்றிற்கு ஏற்ப நடக்கச் சோம்பித் தங்கள் மனம்போலத் திரியும் வெறிகொண்டு, தங்கள் வாக்குகளைத் திறமையற்ற ஒருவர்க்குப் பதிவு செய்திருந் தால் எட்மண்ட்ஸ்பரி மடத்தின் நிலைமையும் வரலாறும் யாதாகியிருக்கும்!

அம்மடத்தார் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பெரும் பொறுப்பு ஒன்றையே நினைத்து, இங்கிதம், இச்சகம் இரண்டையும் நீக்கி, நேர்மை, நெறி இவற்றையே கடைப் பிடித்து வன்மையுள்ள தங்கள் வாக்குகளை தக்கவருக்கே பதிவு செய்தனர். தக்க வரான சாம்ஸன் அடிகளார் தாமும் வாழ்வாங்கு வாழ்ந்து, மடத்தையும் துறவிகளையும் முறைப் படி வாழவைத்தார்.

*வாக்கு ஒரு பொறுப்பு*

*தக்க தேர்தல் நல்வாழ்வு*

தக்கவன் ஒருவன் வாழத் தன் கிளை வாழுமன்றோ!

‡ *திருக்குறள்*

# 6. பழங்கால வழக்குத் தீர்ப்பு ஒன்று

திருவெண்ணெய் நல்லூர் என்பது பழைய பதிகளுள் ஒன்று. அது ஒரு சிவத்தலம். அவ்வூரருகே புத்தூர் என்று ஒரு சிற்றூர். அங்கே ஒரு திருமணம் இசைக் கருவிகள் முழங்குகின்றன. மணமகன் மணவறைக்கு வந்திருக்கின்றான்.

புதுமை வழக்கு

அப்பொழுது ஒரு முதியவர் அங்கே வந்தார். மணமகனை அழைத்தார். "நீ என்னுடைய அடிமை. என்னுடைய அடிமையாகிய நீ மணம் செய்துகொள்ளல் முறை யன்று. என்னுடன் நட; வந்து என் ஏவல் செய்வதே உன் கடன்" என்று மணமகனுராகிய நம்பியாரூரரை அழைத்தார்.

ஊர்ச்சபை

நம்பியாரூரர் முதியவரைப் "பித்தன்" என்றும் "பேயன்"என்றும் பின்னும் பல வழியிலும் தூற்றினார். முதியவரான அந்தணர் அதனைப் பொருட்படுத்த வில்லை, ஊர்ச் சபையார்முன் தம் வழக்கைச் சொன்னார். தாம் கொண்டு வந்திருந்த ஆள் ஓலையைக் காட்டினார். நம்பியாரூரர் அதனை வாங்கிக் கிழித் தெறிந்தார். முதியவர் நம்பியாரூரர் கிழித்தது படியோலை என்றும் மூலவோலை தம்மிடம் உள்ள தென்றும் காட்டினார். அதில் நாவலூரருடைய பாட்டனார் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்குத் தாமும் தம் வழி வழி வருபவர்களும் அடிமை யென்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தார். கையெழுத்தை ஒப்பு நோக்கி அதுநம்பியாரூரருடைய

ஆள் ஓலை

பாட்டனுர் கையெழுத்து எனக் கண்டார்கள் சபையார். அவர்கள் "ஆட்சியில், ஆவணத்தில் அயலார் தங்கள் சாட்சியில் நம்பி" தீர்ப்பு அளிப்பவர்கள், தங்களிடம் வரும் வழக்குகளை எல்லாம் தக்க சான்றுகளுடன் தீர ஆராய்ந்து ஓரஞ்செய்யாது துலேக்கோலின் முனைபோல நடுநிலே தவருது தீர்ப்புவாக்கு அளிப்பவர்கள். பலராக விருந்து அவர்கள் அளிக்கும் வாக்குக்கு மறுப்பே இல்லே. ஓர் அந்தணர் வேருேர் அந்தணர்க்கு அடிமையாதல் வழக்கத்தில் இல்லே. அதனுல் அவர்கள் முதலில் வழக்கை ஏற்க மறுத்தார்கள். வெண்ணெய் நல்லூர்ப் பித்தர் மூல ஆளோலே காட்ட, அதனை ஊர்ச்சபையார் சோதித்தபின் முதியவர் வழக்கை வென்றதாகத் தங்கள் வாக்குகளை அளித்தனர். அதனை நம்பியாரூரரும், பிறரும் தலேமேற்கொண்டனர். அத்தகைய தீர்ப்புக்கு மறுப்பே இல்லே.

*வழக்கில் சான்று வகைகள்*

*மறுப்பற்ற தீர்ப்பு*

வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் செய்வதற்கு ஊர் தோறும் சபைகள் இருந்தன. அவைகளில் சான்ருேர்கள் உறுப்பினராக இருந்தார்கள். அவர்கள் ஒரு பக்கமும் சாராது நீதிவழியே வழக்குகளைத் தீர்ப்புச் செய்து வாக்களிப்பார்கள். அவ்வாக்குகள் எல்லோராலும் ஏற்கப்பெறும். ஒருவர் தனித்துத் தீர்ப்புச் செய்வதினும், பலர் கூடித் தீர ஆலோசித்து அளிக்கும் தீர்ப்பு வாக்கு சீரியதாகும் என்பதாம்.

*ஊர்ச் சபைகளில் சான்ருேர்கள்*

ஒரு ஊரில் சான்ருேர்கள் பலர் இருந்து நீதி வழங்குவராயின் அவ்வூரில் உள்ளவர்கள் கவலேயற்று இருப்

பார்கள். அங்குப் பசி, பிணி, கவலே முதலியன தலேகாட்டா. எல்லோரும் மகிழ்ந்து இருப்பார்கள். மக்களுக்குக் குறைகளே இருக்கமாட்டா. ஏதாவது தவறுகள் நடந்தால் அவை திருத்தப்பெறும். ஆதலால் அவ்வூர் மக்கள் மனஅமைதி, மனவாழ்வு நிறைந்து உடல் நலமும் பெருக வாழ்வார்கள். இதனைச் சங்க காலப் புலவர் பிசிராந்தையார் வாக்குப் புலப்படுத்தும். அது வருமாறு.—

புறநானூற்றுச் சான்று

[1] "யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியர்? என வினவு திராயின்
மாண்ட என் மனேவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளேயரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலே
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

இக்காலத்தில் நகரங்களில் இம்மாதிரி [2]நீதிபதிகள் பலர் கூடி நியாயம் வழங்கும் சபைகள் உள்ளன. சிற்றூர்களில் பஞ்சாயத்து [3]நியாய சபைகள் தீர்ப்புச் செய்கின்றன.

[4]பெரிய நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் விசாரணையாகும்பொழுது [5]நீதிபதியோடு இன்னும் சிலர் [6](ஜூரிமார்) இருந்து விசாரணையை நோக்கித் தீர்ப்புக் கூறுவார்கள். அவர்கள் அளிக்கும் வாக்குப்படியே நீதிபதியும் தீர்ப்புக் கூறுவார்.

---

[1] புறநானூறு-191, [2] Bench courts, [3] Panchayats, [4] Session courts, [5] Judge, [6] Jury men.

# 7. வாக்குரிமைப் போராட்டம்

**வாக்கு பிறப்புரிமை**

'வாக்கு' என்பது ஓர் உரிமை. அது ஒரு பிறப்புரிமை. 'வாழ்வார்க்கு வாக்கு வாயில்' என்பது பழமொழி. மக்கள் யாவரும் வாழப் பிறந்தவர்கள். அவர்கட்கு வாழ உரிமை உண்டு. வாழ்க்கைக்கு வாக்கு இன்றியமையாதது. வாழ்க்கை ஓர் உரிமையேபோல வாக்கும் ஓர் உரிமையேயாகும். ஆனால் வாழ்க்கை யாவர்க்கும் எளிதில் அமைந்துவிடுகின்றதா? எல்லோரும் வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிடுகின்றார்களா? அதுபோலவே எல்லாருக்கும் எல்லா உரிமைகளும் எளிதில் கிட்டிவிடுகின்றனவா? பலருக்கு உரிமைகள் எல்லாம் போராடிப் பெற வேண்டியன வாகிவிடுகின்றன. தனி உரிமைகள், இன உரிமைகள், நாட்டு உரிமைகள் எல்லாம் போராட்டத்தின் பயனாகவே கிட்டியிருக்கின்றன வென்பது உலக வரலாறு கண்ட உண்மை.

**வாக்குப் போராட்டங்கள்**

தங்கள் வாழ்க்கைக்காக அமைக்கும் அரசியலில் கலந்து கொள்ளவும், தங்கள் வாக்குகளை அளித்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் வாக்குரிமைகளைப் பெறவும், பல நாடுகளிலும், மக்கள் போராடியிருக்கின்றனர்.

**புரட்சி கத்திப் போர்**

இத்தகைய நாடுகளில் மக்கள் உரிமைப் போராட்டத்தின் விளைவாகப் பல புரட்சிகளும் நடந்திருக்கின்றன. சில நாடுகளில் கத்தியும், யுத்தமும், உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றைப் படிப்போம்.

## 1. இங்கிலாந்து

நாகரிகம், கைத்தொழில், செல்வம், வாழ்க்கைத் தரம், அரசியல் முதலியவற்றுள் இற்றை நாளில் சிறந்து விளங்குவது இங்கிலாந்து. அதன் அரசியல் மிகவும் தாராளமான கொள்கைகளைக் கொண்டுள்ளது. ஆட்சித் தலைமை ஓர் அரசர், அல்லது அரசிக்குரியதுதான். அதாவது முடியாட்சிதான் [1] ஆயினும்

*ஆட்சித் தலைமை*

ஆட்சித் தலைமையின் செயல் முறையும் அதிகாரமும் அளவுபட்டவை. ஆட்சித் தலைமையின் போக்கும், ஆட்சியும் நேர்மையானவை. ஆட்சித் தலைமையும் மக்களும் கலந்தே ஆட்சி முறைகளை அமைக்கின்றனர். இந்த நிலைமை தற்காலத்திய அமைப்பு. அஃதுதானாகட்டும் எளிதில் உருவானதா? ஒரு தலைமுறை இரண்டு தலைமுறையில் வகுக்கப்பெற்றதா? இல்லை. பல நூற்றாண்டுகளுக்கு

*உரிமையின் இயக்கம்*

முன் தோன்றிப் பல நூற்றாண்டுகளில் மாறி இயங்கிப் பண்பட்டு அமைந்ததாகும். இம்மாதிரி ஆங்கிலேயர் வாக்குரிமை பெற்ற வரலாறு படித்தற் குரியது.

பதின்மூன்றாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் [2] ஜான் என்னும் அரசர் தம் மனம் போனவழி ஆட்சிபுரியத் தலைப்பட்டார். கடுமையான வரிகளை விதித்தார்.

*ஜான் 1199—1216*

தமக்கு எதிராகப் பேசுபவர்களை விசாரணையின்றி, நீதிமன்றத் தீர்ப்பின்றிக் கடுமையாகத் தண்டித்தார். நாட்டை வீண் போர்களில் இழுத்துவிட்டு, மக்களைப் போர்புரிய அடிக்கடி வற்புறுத்தித் துன்புறுத்தினார். இவற்றை நோக்

---

1. Monarchy, 2. John.

கிய ஆங்கிலேயப் பிரபுக்கள், பொதுமக்கள், மதத் தலைவர்கள் ஆகியோர் தங்கள் பிறப்புரிமையான வாக்குரிமையைப் பெறத் துணிந்தார்கள். அதற்காக அரசருடன் போரிடவும் தீர்மானித்தார்கள். ஜான் அரசர் பிரான்ஸ் நாட்டுப் போரிலிருந்து 1215-ஆம் ஆண்டில் திரும்பியவுடன், மக்கள் பலரும் ஒன்றுகக் கூடித் [1]தேம்ஸ் நதிக்கரையில் உள்ள [2] ரன்னிமீட் என்னும், ஒரு புல்வெளியில் சூழ்ந்து கொண்டார்கள். அங்கே [3] ஸ்டீபன் லாங்க்டன் என்பவர் மக்களின் தலைவராயிருந்தார். அவர் [4] மக்கள் உரிமைப் பட்டயம் ஒன்று தயார் செய்திருந்தார். அதன் முக்கியமான அம்சம், அரசர் பிரபுக்களின் சபையைக் கலந்து ஆலோசிக்காமல் புது வரிகளை விதிக்கலாகாது என்பதும், நியாய விசாரணையும் நீதிபதியின் தீர்ப்புமின்றி எவரையும் தண்டிக்கக் கூடாது என்பதுமாம். இந்தப் பட்டயத்திற்கு [5] மகா சாசனப் பத்திரம் எனப் பெயர்.

*மகா சாசனப் பத்திரம் 1215*

ஜான் அரசர் அதில் கையெழுத்திட்டார். ஆயினும் அவருக்கு அப் பட்டயத்தின்படி நடப்பதாக எண்ணமே இல்லை. அந்தச் சாசனத்தினுல் மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படவில்லையாயினும், மக்களின் உரிமை உணர்ச்சி, அவர்கள் அதற்கு ஒன்று திரண்டு செய்த கிளர்ச்சி, அவர்கள் கோரிய உரிமைகள், முதலியவற்றை நன்கு விளக்குவதுடன், ஆங்கிலேயரின் உரிமைகளையும் அது நிலை நிறுத்தியது.

*அதன் சிறப்பு*

---

[1]. Thames, [2]Runneymede, [3]. Stephen Langton, [4]. Magna Carta, [5]The Great Charter.

ஜான் அரசர் அந்த மகாசாசனத்தின்படி நடக்காமல் முன்போலவே வரி விதிப்பு விஷயத்திலும், மக்களைத் தண்டிப்பதிலும் நடந்துகொண்டார். மக்கள் சினந்தனர். அரசருடன் போர் புரிய ஒரு பெரும் படை திரட்டினார்கள். பிரான்ஸ் தேசத்து இளவரசரைத் தமக்குத் துணைக்கு வருமாறு அழைத்தார்கள். அவரும் இங்கிலாந்து வந்து மக்கள் கட்சியில் சேர்ந்து போர் புரிந்தார். அந்நிலையில் ஜான் 1216-ம் ஆண்டில் மரணமடைந்தார்.

*ஹென்றி III 1216-1272*

அவருக்குப் பின் அவருடைய மகன் [1] மூன்றுவது ஹென்றி என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவருடைய மைத்துனரான [2] ஸைமன்-டி-மாண்ட்பர்ட் என்பவர் ஆங்கிலேய மக்களுடைய தலைவரானார். அவர் ஆக்ஸ்பர்ட் என்னுமிடத்தில் 1258-ம் ஆண்டில் ஆங்கிலப் பிரபுக்களின் சபை யொன்று கூட்டினார். அங்கே ஒரு பத்திரம் எழுதினார்கள். அதற்கு [3] ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகள் எனப் பெயர். அதன் நிபந்தனைப்படி அரசர் ஆளவேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

*ஸைமன்-டி-மாண்ட் பர்ட்*

மூன்றும் ஹென்றி முதலில் அதை ஒப்புக்கொண்டாலும் பிறகு மீறி நடக்கலானார். அதனால் ஸைமன் தலைமைக்குட்பட்ட ஆங்கிலப் பிரபுக்கட்கும் அரசர்க்குமிடையில் கடுமையான ஒரு போர் நடந்தது. அப்போரில் ஹென்றியும் அவருடைய மூத்த மகன் எட்வர்ட்டும் சிறைப்பட்டார்கள். ஸைமன் ஆட்சித் தலைவரானார்.

குடிமக்கள், ஆட்சியில் கலந்து அரசர்க்கு ஆலோசனை கூறவேண்டுமென்பது ஸைமன் கட்சியாரின் கருத்து. அதற்காக ஒரு சபை கூட்டப் பெற்றது. அதில்

---

[1] Henry III, [2] Simon-de, Montefort, [3] Provsions of Oxford.

பிரபுக்களும், மத குருக்களும் அல்லாமல், நாட்டின் ஒவ்வொரு நகரத்திலிருந்தும் இரண்டு பொது ஜனப் பிரதிநிதிகளும், ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் இரண்டு பொதுஜனப் பிரதிநிதிகளும் அழைக்கப் பெற்றிருந்தனர். அந்த மகாசபைக்குப் [1] பாராளும்மன்றம் என்று பெயர். இதுவே [2]ஸைமன் கூட்டிய பாராளும் மன்றம் 1265 என்று பெயர்.

*பாராளும்மன்றம்*

மூன்ருவது ஹென்றியின் மகன் [3] எட்வர்ட்-I 1272-ல் பட்டத்துக்கு வந்தார். அவர் பொதுமக்களின் வாக்குக் கேற்பத் தாம்ஆட்சி புரியவேண்டுமென்று விரும்பினர். அதன்படி 1295-ல் ஒரு பாராளும் மன்றத்தைக் கூட்டினர். அதற்கு பிரபுக்களும், குருமார்களும், இன்னும் ஸைமன் பாராளும் மன்றத்தைப் போலவே, நகரம், ஜில்லாக்களின் இரண்டிரண்டு பிரதிநிதிகள் அழைக்கப்பெற்றனர்.

*முதல் எட்வர்ட் 1272-1307*

ஸைமனுடைய மகாசபையில் இவர்கள் எல்லோரும் ஒன்ருகக் கூடியிருந்தார்கள். ஆனுல் எட்வர்டின் சபையில் பிரபுக்களும் குருமார்களும் சேர்ந்து தனியாகப் [4]பிரபுக்களின் சபை எனவும், பொதுமக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து [5]பொதுஜன சபை எனவும் இருபிரிவாகக் கூடினர்கள். இதற்கு [6] மாதிரிப் பாரளும் மன்றம் என்று பெயர். ஏனெனில் இதன் மாதிரியைப் பின்பற்றித்தான் இங்கிலாந்தின் பிந்திய பாராளும் மன்றங்கள் அமைந்தன.

*பிரபுக்கள் சபை*

*பொதுமக்கள் சபை*

---

1 Parliament, 2 Simon's Parliament, 3 Edward I. 4 House of Lords, 5 House of Commons, 6 Model Parliament.

மூன்ருவது எட்வர்ட் பிரபு காலத்தில் ஒரு பாராளுமமன்றம் 1376-ல் கூடி மக்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்தது. அந்தப் பாராளுமன்றத்திற்கு [1]நல்ல பாராளும் மன்றம் என்று பெயர். அது பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் கெடுதலாக நடக்கும் அமைச்சர்களை விசாரிக்க ஒரு திட்டம் வகுத்தது. அதன்படி பிரபுக்கள் சபையினர் அமைச்சர்கள் மீது ஏற்பட்ட குற்றச் சாட்டுக்களை விசாரித்தனர்.

*மக்களின் வாக்கு வலுத்தல்*

இம்மாதிரி ஸைமண்-டி-மாண்ட்ன்பர்ட் கால முதல் பொதுமக்களின் வாக்கு, பாராளும் மன்றத்தின் மூலம் அரசியலில் வலுத்துக் கொண்டே வந்தது. அரசர்களும் தம் மனம் போனபடி ஆட்சி செய்ய இயலாமையைக் கண்டுகொண்டார்கள்.

*முதலாம் ஜேம்ஸ் 1603-1625*

ஆனல், பதினேழாவது நூற்ருண்டில், 1603-ல் பட்டத்துக்கு வந்த [2]முதலாம் ஜேம்ஸ் அரசர்க்கும், அவருடைய பாராளும்மன்றத்தினர்க்கும், அடிக்கடி கலகங்கள் நேர்ந்தன. அதற்குக் காரணம் அரசர் பாராளுமன்றத்தினரை ஆலோசிக்காமல் வரிவிதித்ததும் தனக்குப் பிடிக்காதவர்களை விசாரணை யின்றித் தண்டித்ததுமே யாகும்.

*தெய்விக உரிமைக் கொள்கை*

அன்றியும் அரசர் [3]தெய்விக உரிமைக் கொள்கை என்று சொல்லி, அரசர்கள் கடவுளின் பிரதிநிதிகள் என்றும், அவர்களுடைய அதிகாரமும் செயல்களும் எல்லையற்றவை என்றும், அவை மனிதர் தணிக்கைக்கு அப்பாற்பட்டவை என்றும் சொல்லி நடந்து கொண்டார்.

---

[1] Good Parliament, [2] James I, [3] Divine Right Theory.

முதலாம் ஜேம்ஸ் அரசருடைய மகன் [1]முதலாம் சார்லஸ் அரசர் காலத்தில் மக்களின் வாக்கு வன்மை எத்துணை அளவு வலுவுள்ளது என்பது காட்டப்பெற்றது. அந்த வரலாறு வருமாறு:-

*சார்லஸ் I 1625–1649*

முதலாம் சார்லஸ் அரசர் காலத்தில் கூடிய பாராளு மன்றம் 1628-ல் [2]உரிமை விண்ணப்பம் ஒன்றை அரசரிடம் சமர்ப்பித்து அரசரின் ஒப்பம் பெற்றது. அதன்படி அரசர் பாராளும் மன்றத்தின் ஒப்பமின்றிப் புதிய வரிகளை விதிக்கலாகாது. எவரையும் நியாய விசாரணையின்றித் தண்டிக்கக் கூடாது.

*உரிமை விண்ணப்பம் 1628*

ஆனல் சார்லஸ் அரசர் அதன்படி நடக்க வில்லை. அதனல் பாராளும் மன்றம் அரசருடைய அமைச்சர்கள் மீதுகுற்றஞ் சாட்டி அவர்களுக்கு மரண தண்டனையும் விதித்தது. அன்றியும், சார்லஸ் அரசருடைய வரம்பு மீறிய செயல்களைக் கண்டித்து [3]மகா எச்சரிக்கைப் பத்திரம் என்ற ஒரு சாசனத்தையும் அரசர்க்கு எச்சரிக்கையாக எழுதிக்கொடுத்தது.

*மகா எச்சரிக்கைப் பத்திரம்*

அதனல் சார்லஸ் அரசர்க்கும், பாராளும் மன்றத்திற்கும் போர் மூண்டது. கடைசியில் அரசர் தோல்வியுற்ருர். குற்றஞ் சாட்டப்பெற்ருர். ஒரு விசாரணை சபை அவரை விசாரித்து 1649-ல் அவரை அவருடைய அரண்மனைக்கு வெளியில் கொலை செய்துவிடும்

*வாக்குரிமைப் போர்*

---

[1] Charles I. [2] Petition of Rights. [3] The Grand Remonstrance.

படி உத்திரவிட்டது. இப்பாராளும் மன்றம் 1640 முதல் 1660 வரையில் இருபது வருஷகாலம் நீடித்து இருந்தமையால் [1]நீடித்த பாராளுமன்றம் என்று பெயர் பெற்றது.

*நீடித்த பாராளுமன்றம்*

இதனைவிட வலுத்த பாராளுமன்றத்தைக் காண்பதரிது. படைதிரட்டி அரசருடன் போர் புரிந்து அரசர் தலையையும் வாங்கியது. மக்கள் வாக்கின் வன்மையின் உச்சநிலை இது !

*பொதுவரசு 1649-1660*

முதலாம் சார்லஸ் கொல்லப்பட்டபின் இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சி, அதாவது [2]குடியரசு அல்லது பொதுவரசு அமைந்தது. [3]கிராம்வெல் என்பவர் அதன் தலைவர். கிராம்வெல் சில காலத்துக்குப் பிறகு பாராளுமன்றத்தினருடன் கலகம்செய்து கொண்டு தாமே ஆளத் தொடங்கினர். அப்போது அவருக்கு எதிராக உள்நாட்டுப்போர் மூண்டது. அதன் பயனாக முதலாம் சார்லஸின் குமாரர் [4] இரண்டாம் சார்லஸ் அரசரானர். மறுபடியும் இங்கிலாந்தில் முடியரசு ஏற்பட்ட நிகழ்ச்சியை [5]முடியரசு மீட்சி என்பர் வரலாற்று ஆசிரியர்.

*முடியரசு மீட்சி 1660*

இரண்டாவது சார்லஸ் அரசர் காலத்துக்குப்பின் அவர் தம்பி [6]ஜேம்ஸ் என்பவர் பட்டத்துக்குரிய ஆனல் அவருடைய மதம் காரணமாகப் பாராளுமன்றத்தினர் அவரைப் பட்டத்துக்கு வரவிடாமல் தடுக்க [7]விலக்குதல் சட்டம் என்று ஒரு சட்டத்தை மக்கள் சபையில் நிறைவேற்றினர்கள். அது பொதுமக்கள்

---

[1] Long Parliament, [2] Commonwealth, [3] Cromwell, [4] Charles II, [5] Restoration, [6] James, [7] Exclusion, Bill.

*சார்லஸ் II* *1660-1685* சபையில் நிறைவேறினாலும் பிரபுக்கள் சபையில் தள்ளுபடியாயிற்று. இச்சட்டம் பாராளும் மன்றத்தில் [1]விக், [2]டோரி என்ற இரண்டு அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்தது. இக் *கட்சிகள்* கட்சிகள் தாம் பிந்திய [3] கட்சி யாட்சியின் அடிப்படை.

இரண்டாவது ஜேம்ஸ் அரசர் பட்டத்திற்கு வந்தது முதல் அவருக்கும் பொதுமக்களுக்கும் மதவிஷயமாகக் கலகமாகவே யிருந்தது. ஜேம்ஸுக்கு *ஜேம்ஸ் II* *1685-1688* ஆண் குழந்தை பிறக்கவே பொதுமக்கள் அக்குழந்தைபட்டத்திற்கு வந்தால் ஜேம்ஸ் அரசரைப்போலவே காதோலிக் மதத்தினரை ஆதரிக்கும் என்று அஞ்சினார்கள். ஆகையால் பாராளும் மன்றத்தினர் இங்கிலாந்து அரச குடும்பத்துப் பெண்ணாகிய [4]மேரி என்பவர் கணவரும் [5]ஹாலந்து நாட்டு அரசருமான [6] வில்லியம் என்பவரை இங்கிலாந்துக்கு வந்து ஆட்சியை ஏற்றுக்கொள்ள அழைத்தார்கள். அவரும் ஒரு பெரும்படையுடன் இங்கிலாந்தில் வந்து இறங்கினார். அதுகண்ட இரண்டாவது ஜேம்ஸ் பிரான்ஸ் தேசத்துக்குப் போய்விட்டார்.

பாரளும்மன்றத்தினர், அரசிடம் காலியாயிருந்ததெனக் கூறி, ஆங்கிலமக்களின் உரிமைகளையும் மதத்தையும் பாதுகாப்பதாக வில்லியம், மேரி, ஆகிய *வில்லியம், மேரி* *1689-1702* இருவரிடமும் வாக்குறுதி பெற்றுக் கொண்டு அவர்களுக்கு முடி சூட்டுவித்தனர். பாராளும் மன்றத்தார் தங்கள் உரி

---

[1] Whigs, [2] Tories, [3] Party-Government, [4] Mary, [5] Holland, [6] William.

மைகளைப் புறக்கணித்த இரண்டாவது ஜேம்ஸ் அரசரைப் பட்டத்திலிருந்து விலக்கி வில்லியம், மேரி இருவருக்கும்1688-ல் முடிசூட்டுவித்த நிகழ்ச்சியை "[1]புகழ்பெற்ற புரட்சி" என்று வரலாறு கூறுகின்றது,

*புகழ் பெற்ற புரட்சி 1688*

வில்லியம், மேரி, பட்டத்துக்கு வந்தவுடன், பாராளும் மன்றத்தினர் மக்கள் உரிமைகளைப் பாதுகாக்க [2]உரிமைச் சட்டம் என்ற பெயரால் ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்கள். அதன்படி பாராளும் மன்றத்தினரின் ஆலோசனைப்படியல்லாமல் அரசர் தம் மனம் போனவாறு ஆட்சி நடத்தலாகாது. பாராளும் மன்றத்தின் சம்மதம் இல்லாமல் வரிகளை விதிக்கலாகாது. இவைபோன்ற மக்களின் உரிமைகள் மக்களின் வாக்கு வன்மையை அதிகப் படுத்தின.

*மக்கள் உரிமைச் சட்டம்*

பாராளும் மன்றத்தில் இரண்டு கட்சிகள் முதலாம் சார்லஸ் அரசர் காலத்தில் ஏற்பட்டவை என்று படித்தோம். அதில் பெரும் பான்மை உறுப்பினர்கள் பெற்றிருந்த கட்சியிலிருந்துதான் அரசர் தம் அமைச்சர்களை நியமிக்க வேண்டுவதாயிற்று. இல்லாவிடில் அமைச்சர்கட்குச் சட்டசபையின் ஆதரவு கிடைக்காது. இத்தகைய ஆட்சியைக் கட்சி ஆட்சி என்பர்.

*பெரும் பான்மைக்கட்சி: அமைச்சர்கள்*

[3]முதலாவது ஜியார்ஜ் அரசர் காலத்தில் பெரும் பான்மைக் கட்சியினருள் குறிக்கப்பெறும் அமைச்சர்கள் அடிக்கடி கூடி அரசியல் காரியங்களைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு

*ஜியார்ஜ் I 1714-1727*

---

[1] Glorious Revolution, [2] Bill of Rights, [3] GeorgeI.

தனி இடம் அமைத்தனர். அதற்குக் [1] காபினெட் என்று பெயர். இப்பெயரே மந்திரிசபைக்கும் ஆகு பெயராக அமைந்தது. அத்தகைய கூட்டங்களில் அரசர் தலைமை வகிக்க வேண்டியிருந்தும் அரசர்க்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சி இன்மையாலும் இதர காரணங்களினாலும் பெரும்பான்மைக் கட்சித் தலைவரே கூட்டங்கட்குத் தலைமை ஏற்று வந்தார். அவரே [2] முதல் அமைச்சர். இந்த அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பு வாய்ந்தவர்கள். அவர்கள் அமைச்சர் என்ற முறையில், தனித்தோ தொகுத்தோ செய்யும் காரியங்கட் கெல்லாம் பாராளுமன்றத்திற்குக் [3] கூட்டுப் பொறுப்பானவர்கள். இதனைக் கூட்டுப் பொறுப்பு என்பர். ஒருவர் செய்யுந் தவறு, அம்மந்திரி சபையார் ஒருங்கே செய்த தவருக முடியும். முதலாம் ஜியார்ஜ் மன்னர் காலத்தில் [4] ராபர்ட் வால்போல் என்பவர் பிரதான மந்திரியானர். அவர் மிகுந்த திறமையுடன் ருபது வருஷகாலம் அப்பதவியில் இருந்து ஆட்சி புரிந்தார்.

காபினெட்

முதல்அமைச்சர்

கூட்டுப் பொறுப்பு

ராபர்ட் வால் போல்

[5] மூன்றுவது ஜியார்ஜ் காலத்தில் 1831 ல் ஒரு பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் இயற்றினர்கள். அதன்படி வாக்காளரின் சொத்துரிமை, வரி அளவு குறைக்கப் பெற்று, நிலம் பயிரிடுவார்கள் வியாபாரிகள், தொழிற்சாலை முதலாளி

ஜியார்ஜ் III

வாக்குப் பெருக்கம்

1 Cabinet 2 Prime minister 3 Joint Responsibilty 4 Robert Walpole 5 George III

கள் வாக்குரிமை பெற்றார்கள். அதனால் வாக்காளர் தொகை பெருகியது.

விக்டோரியா
1837-1901

[1] விக்டோரியா அரசியார் காலத்தில் மக்கள் தங்கள் வாக்குரிமைகள்பற்றிப் பெரும் கிளர்ச்சி செய்தார்கள். அவர்கள் தங்கள் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை வேண்டுமென்றும், அபேட்சகர்கள் அறியாமல் தங்கள் வாக்குகளை இரகசியமாகப் பதிவு செய்ய வசதி வேண்டுமென்றும், பாராளும்மன்றத் தேர்தல் ஒவ்வொரு வருஷமும் நடைபெறவேண்டுமென்றும், ஜனத்தொகைக் கணக்கின்படி பிரதிநிதிகள் தேர்தல் பெறவேண்டு மென்றும் கேட்டார்கள்.

மிதவாதிகள்
அமிதவாதிகள்

விக்டோரியா அரசி காலத்தில் [2] டோரிகட்சியினர் [3] மிதவாதிகள் (கன்ஸெர்வெடிவ்ஸ்) எனவும், [4] விக் கட்சியினர் [5] அமிதவாதிகள் (லிபரல்ஸ்) எனவும் தங்கள் கட்சிப் பெயரை மாற்றி வைத்துக் கொண்டார்கள்.

வாக்குரிமை
பெருக்கம்

1867-ல் பாராளும் மன்றச் சீர்திருத்தச் சட்டம் ஒன்று நிறைவேறியது. அதன்படி ஜனத்தொகைக் கேற்பப்பிரதி நிதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். தொழிலாளிகளும் வாக்குரிமை பெற்றார்கள். அதனால் தொழிலாளிகளும் அரசியலில் கலந்துகொள்ள இயன்றது. 1871ல் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை இரகசியமாகப் பதிவு செய்யும் உரிமை பெற்றனர்.

---

[1] Victoria [2] Tories [3] Conservatives [4] Whigs [5] Liberals.

1884-ல் கிராமங்களில் வீடுகள் உள்ள அனைவருக்கும் வாக்குரிமை நீடிக்கப் பெற்றது. அன்றியும் இங்கிலாந்து தேசம் முழுவதும் சம ஜனத்தொகையுள்ள பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்று, ஒவ்வொரு பிரிவிலுமுள்ள வாக்காளர்கள் ஒவ்வொரு பிரதி நிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்றும் ஆயிற்று. இச்சட்டத்தின்படி ஏழைக்குடிகளும் வாக்குரிமை பெற்றுப் பாராளும் மன்றத்தினரைத் தேர்ந்தெடுத்து ஆட்சியில் கலந்து கொள்ளும் உரிமை பெற்றார்கள்.

*ஏழைக் குடி கட்கும் வாக்கு*

[1] ஐந்தாம் ஜியார்ஜ் அரசர் காலத்தில், பொது மக்கள் சபை, பிரபுக்கள் சபை உறவுபற்றிய சீர்திருத்தங்கள் நிறைவேறின. பொருளாதாரச் சட்டங்களைத் திருத்தவோ அல்லது தள்ளிவிடவோ பிரபுக்கள் சபைக்கு உரிமை இல்லை என்றும், பொதுமக்கள் சபையினரால் மும்முறை நிறைவேற்றப் பெறும் திட்டங்கள் மேல்சபையாரின் ஒப்பமின்றியே சட்டமாகும் எனவும், பாராளுமன்றத் தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டாயம் நடைபெற வேண்டுமெனவும் ஏற்பட்டது. அன்றியும் வயதுப் பொருத்த முள்ள ஆண்பெண், இருபாலாரும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர்.

*ஐந்தாம் ஜியார்ஜ் 1910-1935*

*பொதுமக்கள் வாக்குவலிமை*

இவ்வாறு 1215-ல் மகாசாசனப் பட்டயம் பெற்றது முதல் பல அரசர்களைப் போர் முனையில் எதிர்த்து நின்றும், ஓர் அரசரைக் கொல்வித்தும், ஓர் அரச பரம்பரையை

[1] George V

மாற்றியும், அரசர்க்கு ஏற்றபடி நடந்து ஆட்சியில் தவறு கள் செய்த அமைச்சர்களைத் தண்டித்தும், பிரபுக்கள் சபையின் உரிமைகளை அளவு படுத்தியும், சுமார் ஏழுநூ ருண்டுகள் போராடி ஆங்கிலேயர் தங்கள் நாட்டின் ஆட்சி முறையைத் தங்கள் வாக்கு வன்மையால் அமைத்திருக் கின்றார்கள். அந்த அரசியலுக்கு "[1] அளவுபட்ட சட்டபூர் வமான முடியரசு" என்று பெயர். சமய சந்தர்ப்பங்களுக் கேற்ப, விவகாரங்களில் வளைந்து கொடுத்தும், மாறியும், இளகியும், தளர்ந்தும், இறுகியும், இயங்கி அமைந்து நடக்கக் கூடியது அந்த அரசியல். அதன் அடிப்படை வல்லமை தனிமக்கள் வாக்குரிமையையே சாரும்.

### ii. பிரான்சு

[2] போர் போன் பரம்பரையில் [3] பதினான்காவது லூயி என்ற அரசர் காலம் வரையில் பிரான்ஸ் தேசத்தில் கொடுங் கோன்மை நிலை நின்றது. அவருக்குப் பின் வந்த அரசர்கள் வலுவிழந்தவர்கள். அவர்கள் காலத்தில் பிரபுக்களும், மதகுருக்களும் அதிகாரம் எல்லாம் கைக்கொண்டிருந்தனர். அவர் கள் மிகக் குறைந்த வரியே அரசாங்கத் துக்குச் செலுத்தி வந்தார்கள். பொது மக்களும் ஏழைகளும், தொழிலாளர்களும் நிறைய வரி செலுத்தினார்கள். அவர்கள் பிரபுக்களாலும் அரசினரா லும் பெரிதும் துன்புறுத்தப்பட்டார்கள். ஆட்சி முறை யில் அவர்களுக்கு வாக்கு இல்லை. பிரஞ்சு அரசாங்கம் குடியும், கூத்துமாகப் பிரபுக்கள் இன்பப் பொழுது போக் குக்குரிய ஒரு கேளிக்கை மண்டபமாயிருந்தது.

*முடியரசு வன்மை இன்மை*

---

[1] Limited Constitutional monarchy.

[2] Bourbon [3] Louis XIV

[1] பதினாறாவது லூயி என்ற அரசர் நீதி நெறி வழங்கத் திறமை யற்றவராயிருந்தார். அப்போது பொதுமக்கள், அரசியல் அட்டூழியங்களைக் கண்டு மனம் பொறாமல் கொதித்து எழுந்தார்கள். அரசியலில் உரிமை வேண்டினர். தங்களை அது வரையில் வருத்தி வந்த பிரபுக்களையும் குருக்களையும் கொலை புரிந்தனர். பதினாறாவது லூயியும் அரசியையும் தலைவாங்கினர். [2] முடியரசை ஒழித்துக் [3] குடியரசை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

*புரட்சி*

இதனைப் [4] பிரெஞ்சுப் புரட்சி என்று வரலாறு கூறும். பிரான்சில் குடியரசின் [5] முதற் பரிபாலகராக [6] நெப்போலியன் அமைந்தார். அவர் பெரும் வீரர். அவர் பிரெஞ்சுக் குடியரசுக்காக ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடனும் போர் புரிந்தார்.

*நெப்போலியன்*

அவர் தோல்விக்குப் பின் பிரான்ஸில் ஒரு காலம் முடியாட்சி நிறுவப் பெற்றதென்றாலும், இறுதியாக நிலையாக அங்கு அமைந்திருப்பது குடியாட்சியே. பிரெஞ்சு மக்கள் ஆட்சித்துறையில் வாக்குகளைப் பெற்றுள்ளனர். ஆயினும் அமைதியும், ஒழுங்கும் அவர்களுடைய தேர்தல்களில் அமையவேண்டும். ஆங்கிலேயரைவிடப் பிரெஞ்சுக்காரர்கள் முற்போக்கான உரிமை மனப்பான்மையும், சுயேச்சைக் கொள்கையும் உடையவர்கள். அக் கொள்கைகளுடன் அமைதி ஒழுங்கு இவையும் அமையுமானால் அவர்களுடைய ஆட்சியமைப்பு இன்னும் வளமை பெற்று இயங்கும்.

*நிலையான குடியாட்சி*

*பிரெஞ்சு தேர்தல்கள் தன்மை*

---

[1] Louis XVI [2] Monarchy [3] Republic
[4] French Revolution [5] First consul [6] Napoleon.

அதன் அமைப்பும், இயக்கமும், இறுக்கமும் இன்னும் பண்பெற வேண்டும். உரிமை என்பது ஒரு கூரிய படை. அதனைத் தக்கவழியில் பயன்படுத்தினுல் அது நலம் பயக்கும். அதுவன்றி உரிமையை மனம் போனவழி பயன்படுத்தினுல், இனத்துக்கும் நாட்டுக்கும் இன்னலே விளையும்.

*உரிமை ஒரு கூரிய படை*

பிரெஞ்சுக்காரர்கள் வாக்குரிமையைப் பெருவாரியாகப் பெற்றுள்ளனர். அதன் பயனை அவர்கள் நன்கு பெறவேண்டும்.

## III. அமெரிக்கா

இங்கிலாந்தில் மதப்பூசல்கள் காரணமாகப் பலர் அமெரிக்காவில் குடியேறினுர்கள். அவர்கள் அங்கே ஆங்கிலேய ஆட்சி முறைகளை அமைத்து ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்டு நடந்து வந்தார்கள்.

*அமெரிக்காவில் குடியேற்றம்*

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் 1756-1763-ல் நடந்த ஏழு வருடப் போரில் அமெரிக்க மக்களும் கூடச் சேர்ந்து ஆங்கிலேயருக்குச் சாதகமாகப் பல உதவிகளைச் செய்து போர் புரிந்தார்கள். 1763-ல் மூன்ருவது ஜியார்ஜ் காலத்தில் அப் போர்முடிந்தது. போரின் செலவுகளில் ஒரு பகுதியை அமெரிக்க மக்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதற்காக அமெரிக்க மக்கள் தங்கள் பொருளாதாரப் பத்திரங்களை எல்லாம் ஆங்கிலேய [2] முத்திரைக் காகிதத்தில் எழுதவேண்டுமென்றும் வற்புறுத்தி முத்தி

*வரி விதிப்பு*

[1] Seven years'war [2] Stamp papers

ரைக் காகிதங்களை இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா வுக்கு அனுப்பினார்கள்.

தங்களை யோசிக்காமல் தங்கள்மீது வரிவிதிக்க ஆங்கிலேய அரசினர்க்கு உரிமை இல்லை என்று அமெரிக்கர் கூறினார்கள். தங்கள் பிரதிநிதித்துவம்-வாக் குரிமை - இல்லாத ஆங்கிலேயப் பாராளும் மன்றத்தினர் தங்கள்மீது வரிவிதித்ததற்காக ஆத்திர மடைந்தார்கள். "[1]பிரதிநிதித்துவம் இல்லாத இடத்தில் வரி உரிமையும் இல்லை" என்று கிளர்ச்சி செய்தனர். அதுகண்ட ஆங்கில அரசினர் முத்திரைத்தாள் சட்டத்தை விலக்கி அமெரிக் காவில் இறக்குமதியாகும் தேயிலை, காகிதம் முதலிய பொருள்களின் மேல் இறக்குமதி வரி விதித்தனர். அமெரி கர் அந்த வரிகளையும் கொடுக்க மறுத் தார்கள். பிறகு ஆங்கிலேய அரசினர் தேயிலை தவிர மற்றெல்லாப் பொருள் களின்மீதுமுள்ள வரியை நீக்கினார்கள். ஆனால் அமெரிக்கரோ தம்முடைய கொள்கைப்படி தேயிலை வரியையும் கொடுக்க மறுத்தார்கள்.

*அமெரிக்கர் கொள்கை*

*வரி கொடா இயக்கம்*

1773-ல் சில ஆங்கிலேயக் கப்பல்கள் தேயிலைச் சரக்கை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவில் [2]போஸ்டன் துறை முகத்தில் தங்கின. அப்போது அந் நகரவாசிகள் கோபமடைந்து [3]சிவப்பு இந்தி யர்களைப்போல மாறு வேடந்தரித்து கப்பல்களுக்குள் நுழைந்து தேயிலைப் பொடிகளை எல்லாம் கடலில் வாரி எறிந்தனர்.

*போஸ்டன் கலகம்*

---

1 "No Representation No Taxation"

2 Boston 3 Red Indians

அதுகண்ட ஆங்கிலேயர் கோபமடைந்து அமெரிக்கர்மீது போர் தொடுத்தார்கள் (1774-1783). அமெரிக்க மக்கள் ஆத்திரமடைந்து எல்லா நாடுகளும் [1]பிலடெல்பியா என்னும் நகரில் ஒரு மகாசபையைக் கூட்டினர்.

*உரிமைப் போர்*

அங்கே அவர்கள் ஆங்கில அரசினரிடமிருந்து உரிமையும் சுதந்தரமும் பெற்ற நாடுகளாகிவிட்டன என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அதற்குச் [2]சுதந்தர அறிக்கை என்று பெயர். அவர்களின் தலைவர் [3] ஜியார்ஜ்வாஷிங்டன் என்பவர். அவர் தலைமையில் பல படைகள் திரண்டன. ஆங்கிலேயருக்கும் அமெரிக் கருக்கும் [4] சாரடோகா என்னுமிடத்தில் நடந்த போரில் ஆங்கிலேயர் தோற்று அமெரிக்கருக்குச் சரண் அடைந்தனர்.

*சுதந்தர உரிமை அறிக்கை*

*உரிமைப் போர் வெற்றி*

அச்சமயத்தில் பிரான்சுதேசமும், ஸ்பெயினும் அமெரிக்கருக்குத் துணையாகச் சேர்ந்தன.

அதுகண்ட ஆங்கிலேயர் குழப்பமடைந்தனர். இங்கிலாந்து பாராளுமன்றத்தில் அமெரிக்கருடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. சாதாம் பிரபுவான பிட் என்பவர் தம்முடைய நோயையும் பொருட்படுத்தாமல் பாராளும்மன்றக்கூட்டத்திற்கு வந்தார். அவர் "நமக்குத் தொன்று தொட்ட பகைவரான பிரான்சு தேசத்தாருடன் சமாதானம் செய்து கொள்வதா? அமெரிக்கர் சுதந்தரத்தை அடைய விடுவதா ? " என்று

*ஆங்கிலேயர் குழப்பம்*

---

[1] Philadelphia [2] Declaration of Independence [3] George Washington [4] Saratoga. [5] Earl of Chatham. [6] Pitt

எதிர்த்துப் பேசினர். அதனுல் பாராளும் மன்றத்தார் அமெரிக்கருடன் சமாதானத்துக்கு உடன்படவில்லை.

*ஆங்கிலேயர் மறுபடியும் தோல்வி 1781*

பின்னர் [1] ஹாலந்தும் அமெரிக்காவுடன் சேர்ந்தது. நடந்த போரில் 1781-ல் ஆங்கிலப்படை அமெரிக்கருக்குச் சரண் அடைந்தது. அதன் பிறகு ஆங்கிலேயர் 1783-ல் அமெரிக்கருடன் சமாதானம் செய்துகொண்டார்கள். அதன்படி, ஆங்கிலேயருக்குச் சொந்தமான அமெரிக்கப் பகுதியையும் அமெரிக்கருக்கு விட்டுக் கொடுத்து அவர்களுடைய சுதந்தரத்தையும் ஒப்புக் கொண்டார்கள்.

*அமெரிக்கர் சுதந்தரம்*

[1] Holland

# 8. நம் நாட்டு வாக்குரிமைப் போர்

வாக்குரிமை என்பது மக்கள் ஆட்சியில் கலந்து கொள்ளுதல் என்பதும், தொன்றுதொட்டு, அது நம் நாட்டினரின் உரிமை என்பதும், அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சோழ, பாண்டிய, சேர அரசர்கள் காலத்தில், அரசியல், ஊராட்சி, வழக்குத்தீர்ப்பு முதலியவற்றில் குடிமக்களுக்கு வாக்குரிமை இருந்தது என்ற விவரமும் முன் பாடங்களில் ஓரளவு படித்தோம்.

*வாக்குரிமை*

பிற நாடுகளில் மக்கள் வாக்குரிமை பெற்ற வரலாறுகளையும் படித்தோம். இப்பாடத்தில் இப்போது நாம் பெற்றிருக்கும் வாக்குரிமையும், அரசியலும் நமக்குக் கிடைக்க நம் நாட்டினர் நடத்திய பல்வகைப் போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும், நம்முடைய தியாகங்களையும் பற்றிப் படிப்போம்.

*நம் நாட்டு வாக்குப் போர்*

நம் நாடு இயற்கை வளம் நிறைந்தது. பொன்னும் முத்தும், மணியும், யானைத் தந்தமும் விளைவது. மிளகு, இலவங்கம்; முதலிய வாசனைப் பொருள்களும், சந்தனம், அகில், தேவதாரு முதலிய நறுமணக் கட்டைகளும் ஏராளமாக உற்பத்தியாவது.

*நம் நாட்டு வளம்*

முன்னாளில் நெசவும், வேளாண்மையும் தலைசிறந்து விளங்கியது. மக்கள் மனம் மகிழ்ந்து வாழ்ந்தனர்.

இத்தகைய நம் நாட்டில் வாணிபம் செய்வதற்கென வந்த ஐரோப்பிய நட்டினருள் ஆங்கிலேயரும் ஒருவர்.

அவர்கள் இங்கு வந்து வாணிபம் செய்து
*ஆங்கிலேயர்* கொண்டே இந்திய உள்நாட்டு அரசர்
*வாணிபம்* களுடன் உறவுகொண்டார்கள். நம்
நாட்டு அரசர்களுக்குள் ஏற்படும் கலகங்கள், சண்டைகளில் கலந்துகொண்டு போர் புரிந்து கொஞ்சங் கொஞ்சமாக நாடு பிடித்தனர். தங்கள் பண்டங்கள் துணிகளை இங்கு விற்கவே உள்நாட்டு வாணிபம், கைத்தொழில்களை நசுக்கினார்கள். நாடு சீரழியலாயிற்று. நாட்டின் ஆட்சியில் மக்
*நாடு சீரழிதல்* களுக்கு உரிமையில்லை. ஆங்கிலேய
வணிகர்கள் மனப்படியும் அவர்கள் போர்ப்படையின் வலிமையின் ஆதரவிலும் ஆட்சி நடைபெற்றது. எனவே நாட்டுமக்களிடையே வறுமையும் மனக் கொதிப்பும் மூண்டது. ஆங்கில வியாபாரக் கூட்டத்தாரை எதிர்த்து உரிமை கோரி
*மனக் கொதிப்பும்* அவ்வப்போதும் கிளர்ச்சிகள் நடந்தன.
*கிளர்ச்சியும்* உள்நாட்டில் வீர உணர்ச்சி கொண்டவர்
கள் பலர் பல தடவைகள் உரிமைப்போர் விளைவித்தனர்.

தமிழ் நாட்டில் பாஞ்சாலங் குறிச்சியில் அரசு நடத்திய வீரபாண்டியர் என்பவர் ஒருவர். அவரைக் கட்டபொம்மன் என்றும் அழைப்பர். அவர் ஆங்கிலேயர்
*வீரபாண்டிய* வரிவிதிப்பதையும், உள்நாட்டு அரசர்களை
*கட்டபொம்மன்* அடக்குவதையும் எதிர்த்தார். ஆங்கிலே
யர் பீரங்கிப் படைகளை ஏவிப் போர் புரிந்தார்கள். அவ்விதம் வீரபாண்டியர் பத்தாண்டுகள் வரையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். பிறகு வஞ்சகரால் காட்டிக் கொடுக்கப் பெற்று ஆங்கிலேய

ரால் தூக்கிலிடப் பட்டார். அவரது நகரமும் கோட்டையும் பாழாயின. அவரது சுற்றத்தார் சிறைப்பட்டனர்.

**ஊமைத்துரை**

பின்னர், அவருடைய தம்பியான ஊமைத்துரை ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து ஆங்கிலேயருக்குப் பெருந் தொல்லை விளைவித்து வந்தார். முடிவில் தம்முடைய நண்பர்களால் வஞ்சனையும், துரோகமும் விளைவது கண்டு மனம் வெறுத்து நாடகன்று துறவியானர்.

வீர பாண்டியர் இறந்தாலும், ஊமைத்துரை துறவியானலும், நாட்டில் உரிமை உணர்ச்சியும் வீரக்கனலும் வளர்ந்தோங்கி வந்தன.

**ஹைதர் அலியும் திப்புவும்**

மைசூரில் ஹைதர் அலி என்பவரும், அவருக்குப் பின் அவருடைய மகன் திப்பு சுல்தானும் அன்னிய நாட்டினர்க்கு அடிபணிய மறுத்துக் கிளர்ச்சிப் போர் செய்தார்கள்.

**திருவாங்கூர் வேலுத்தம்பி**

திருவாங்கூர் அரசர் ஆங்கிலேயருக்கு ஒத்தாசையாயிருந்தார். அதுகண்டு திருவாங்கூர் திவான் வேலுத்தம்பி என்பவர் மனம் புழுங்கினர்; கொதித்தெழுந்தார். கொச்சி திவானையும் துணை சேர்த்துக் கொண்டு ஆங்கிலேயப் படையினரை அடக்க எழுந்தார். ஆங்கிலேயர் பெரும்படையைக் கொண்டுவந்து திருவாங்கூர் கிராமங்களிற் புகுந்து கொலைபுரிந்தும், கொள்ளையிட்டும் கொடுமை விளைத்தனர். திவான் வேலுத்தம்பியை மக்களும், அரசரும் கைவிட்டார்கள். அவர்மனம்நொந்து பகவதி அம்மன் ஆலயத்துட் புகுந்து தம் உடைவாளால் தம் தலையைச் சீவி அம்மனுக்குத்தாமே பலியானர்.

ஆங்கிலேயர் அத்தலையைத் திருவனந்தபுரத்தில் உயர நாட்டி மக்களை அச்சுறுத்தி அடக்கினர்.

இவ்வாறு கொலைமுகத்திலும், போர் முனையிலும் மக்களை அச்சுறுத்தி ஆங்கிலேயர் அடக்கி வந்த போதிலும் மக்களின் ஆத்திரம் பெருகிக் கொண்டே வந்தது.

வட ஆர்க்காட்டு வேலூரில் திப்பு சுல்தானின் குமாரர்கள் அவ்விடமிருந்த இந்தியச் சிப்பாய்களுக்கு வீர உணர்ச்சி மூட்டிக் கிளப்பி விட்டார்கள். அங்கே அவர்கள் கலகம் செய்து வேலூர் கோட்டையைப் பிடித்து ஆங்கிலேயக் கொடியை அறுத்து வீழ்த்தினுர்கள். மைசூர் சுல்தானுடைய கொடியைப் பறக்க விட்டனர்.

*வேலூர்க் கிளர்ச்சி*

அதற்குள் ஆங்கிலப் பெரும்படை யொன்று சென்னையிலிருந்து வந்து சிப்பாய்களை அடக்கி அழித்தது. திப்புசுல்தான் குமாரர்கள் கல்கத்தாவிற்கு அனுப்பப் பட்டனர்.

இவ்வாறு ஆங்கில வர்த்தகர்கள் இந்தியாவில் நாடு பெற்று ஆளுவதை எதிர்த்து ஆங்காங்கு அவ்வப்போது கிளர்ச்சிகளும் கலகங்களும் நடந்துகொண்டுதான் இருந்தன. சென்னை, பம்பாய், வங்காளம் என்னும் மாகாணங்களில் ஆங்கிலேய வர்த்தகர் ஆட்சி செலுத்தினுர்கள். அங்கே அவர்கள் கவர்னர்களும் படை வீடுகளும் இருந்தன. அவர்கள் நாட்டு மக்களின் துடிப்பையும், வீர உணர்ச்சியையும் பொருட்படுத்தவில்லை. தங்கள் ஆட்சியை நாடெங்கும் பரப்புவதிலும் இந்தியாவின் இயற்கைச் செல்வத்தை யெல்லாம் கைப்பற்றுவதிலும் நோக்கமாயிருந்தனர்.

*ஆங்கில வர்த்தகர் ஆட்சி*

*மராட்டிய அரசு*

*நாட்டு மீட்சிப் போர்கள்*

*இறுதியில் ஆங்கிலேயர் வெற்றி*

இந்திய நாட்டையும், இந்து தர்மத்தையும், இந்துப் பெண்மணிகளையும், பசுக்களையும், காப்பதென்றும் இந்தியர் வீரத்தை நிலைநாட்டுவ தென்றும் நோக்கங்கொண்டு தோன்றியது மராட்டிய அரசு. அதன் தலைவர் சிவாஜி. அவர் தம்முடைய நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ஒருங்கே முகலாயருடன் ஒரு புறத்திலும், ஆங்கிலேயருடன் மற்றொரு புறத்திலும், போராற்றி வந்தார். அவர் ஏற்படுத்திய கோட்பாடுகளைக் கொண்டு மராட்டிய அரசு பல பிரிவுகளாகப் பிரிந்தது. தத்தமக்குள் வேற்றுமையிருப்பினும் அந்நியரான ஆங்கிலேயரை மாரட்டியச் சிற்றரசர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு எதிர்த்து நின்றார்கள். அவர்கள் இந்திய நாட்டை ஆங்கிலேயரிடமிருந்து மீட்பதற்குப் பல முறை போர் புரிந்தும் இறுதியில் 1763-ம் ஆண்டில் ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர்.

*ஆங்கிலேயர் நிலைத்தல்*

மராட்டியர் காலத்துக்கு முந்திய கிளர்ச்சிகள் எல்லாம் ஒவ்வோர் இடத்தில் எழுந்த உள்ளூர்க் கிளர்ச்சிகள். ஆனால் மராட்டியர் செய்த முயற்சி ஒரு இந்தியத் தேசீய முயற்சியாகும். இந்திய நாட்டையே அந்நியர் ஆட்சியிலிருந்து விடுவிக்கச் செய்த முயற்சி அது. அம் முயற்சி பலனளிக்கவில்லை. ஆங்கிலேயர் இங்கு நிலைத்தனர். மராட்டியர் பெயரளவில் வாழ்ந்து வந்தனர். மராட்டிய அரசரின் முதல்அமைச்சருக்குப் பீஷ்வா என்று பெயர். அப்பரம்பரைக்கு ஆங்கிலேயர் ஆண்டு மானியமாக ஒரு தொகையைக் கொடுத்து அவர்களை ஆட்சியிலிருந்து விலக்கிவிட்டார்கள்.

பின்னர் டில்லியில் பெயரளவுக்கு முகலாய மன்னரா யிருந்தவருடன் ஆங்கிலேயர் சேர்ந்து கொண்டனர். அவரிடத்திலிருந்து வங் காளத்தின் ஆட்சி உரிமையைப் பெற் றுக் கொண்டார்கள்.

*வங்காள ஆட்சி உரிமை*

இவ்வாறெல்லாம் சிற்றரசர்கள் ஆங்காங்கு ஒழிந் தும் மறைந்தும் போயினர். செல்வர்களும் சீமான்களும் ஒடுங்கினர். தொழில், வாணிபம் குறைந்து வந்தன. மக்களிடம், பசியும், பட்டினியும், வறுமையும், நோயும் மலிந்தன.

*இந்தியர் சீரழிவு*

எனவே, முன்பு சிற்றரசரிடமும், சீமான்களிடமும் வேலை செய்து வந்த அனைவரும் ஒருங்கு திரண்டார்கள். அவர்களில் பல சாதி மதத்தினரும் இருந்தார்கள். பல்லாயிரக் கணக்காகத் திரண்ட அவர்கள் ஆங்கிலே யரை ஒழித்துக் கட்டுவதென்று ஆங்காங்கு ஆங்கிலே யர் வசப்பட்ட இடங்களை எல்லாம் தாக் கிக் கொள்ளையடித்தார்கள். அவர்களுக்கு ஆங்கிலேயர் கொள்ளைக் கூட்டத்தார் என்று பட்டங்கட்டினார்கள். ஆயினும் அவர்கள் உண்மையில் உரிமைப் போர் புரிந்த வீரர்கள் தாம். அவர்களைப் பிண்டாரிகள் என்று அழைத்தனர். அவர்கள் தலைவர்கட்கு மானியங்கள் வழங்கினார்கள். அதனால் கலகம் ஓரளவு குறைந்தாலும் வீரர்களின் மன நிலை மாறவில்லை. அவர்கள் வீரம் நிறைந்து காலம் பார்த் திருந்தார்கள்.

*பிண்டாரியர் கலகம்*

இவ்வளவு கலகங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கு மிடை யில் ஆங்கிலேய வர்த்தகர்கள் நாடு சேர்க்க அவ்வப்போது புதிய புதிய முறைகளை வகுத்து நாடு சேர்த்து வந்தார்

கள். அதுவரையில் ஆண்டுவந்த அரச குடும்பங்களில் சந்ததி யற்றுப் போனால் அந்த நாடுகளை எல்லாம் சேர்த்துக்கொண்டார்கள். செல்வச் சீமான்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தார்கள். பலவிதமான மானியங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இவ்வாறு பலவகையிலும் அவர்கள் நாடு சேர்த்து வந்தமையால் உள்நாட்டு மக்கள் மனக் கொதிப்பு மிகுந்தார்கள். தேசமெங்கும் அங்கங்கே வீரர்கள் கூடி மனம் புழுங்கி வந்தார்கள். பலரும் ஒருமித்துக் கூடிக் கிளர்ச்சி செய்து விடுதலை பெறும் காலத்தை நோக்கி நின்றார்கள்.

*சுவீகார உரிமை*

*பறிமுதல்*

*மக்கள் மனக் கொதிப்பு*

நாட்டில் பலர் கூடுமிடங்களில் எல்லாம் நாட்டு நிலைமையைப் பற்றியே பேச்சு. திருவிழாக்களிலும், வீடுகளில் நடக்கும் கல்யாணங்களிலும் நாட்டின் உரிமையைப் பற்றியும் ஆங்கிலேய வர்த்தகரின் போக்குப்பற்றியும் மக்கள் பேசி வருவாராயினர். பண்டிதர்களும், நாடோடி ஆண்டிகளும் நாட்டுப் பாடல்களையும் வீரர்களின் பாடல்களையும் பாடிச் சென்று ஆங்காங்கு வீரஉணர்ச்சியையும், சுதந்தர உணர்ச்சியுயைம் மூட்டிவந்தார்கள். சோதிடம் கேட்போரும், குறிபார்க்கிறவர்களும், நாட்டின் சுதந்தரம் பற்றியே சோதிடம் பார்த்தும் குறிகேட்டும் வந்தார்கள். மூட்டை தூக்கிச் சில்லரை வியாபாரம் செய்த சிறுவர்த்தகர்களும், மாட்டு வண்டி யோட்டிகளும் ஊர் ஊராகச் சுதந்தரப் பேச்சுப் பேசிவந்தார்கள். 1757-ல் பிளாசிச் சண்டைக்குப் பின் வேரூன்றிய ஆங்கில வர்த்தகர் ஆட்சி ஒரு நூற்றாண்டில் அதாவது 1857-ல் சீர்குலைந்து கவிழ்ந்துவிடும்

*எங்கும் சுதந்திரப் பேச்சு*

*இரகசியச் சங்கங்கள்*

என்று நாட்டு மக்கள் ஆங்காங்குப் பேசிவந்தார்கள். அதற்காக ஊர்கள் தோறும் இரகசியச் சங்கங்கள் தோன்றி ஆவன செய்து வந்தன.

*போர்வீரர் கடிதப் போக்கு வரத்து*

ஆங்காங்கு இருந்த படை வீடுகளில் இந்தியப் போர் வீரர்களே நிரம்பி இருந்தார்கள். அவர்களுக்கு இடையில் இரகசியக் கடிதங்கள் போய் வந்து கொண்டிருந்தன. இந்தியச் சுதந்தரக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று சுவர்களில் விளம்பரங்களும் ஒட்டினார்கள். பலரும் ஒருங்கு கூடிக் கிளர்ச்சி செய்து ஆங்காங்கு இருந்த ஆங்கிலேய வர்த்தகரை விரட்டுவது என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

அக்காலத்தில் மராட்டிய பீஷ்வா இறந்து போனார். அவருடைய மகன் நானாபத்மநாபன் என்பவர். ஆங்கிலேயர் முன்பு பீஷ்வாக்களுக்குக் கொடுத்து வந்த ஆண்டு மானியப் பொருளை அவருக்குக் கொடுக்க மறுத்தார்கள்.

அது வரையில் டில்லியில் பெயரளவில்லாவது மொகலாய அரசராயிருந்த பகதூர் ஷாவை ஆங்கிலேயர் பட்டத்திலிருந்து அகற்றி, அவருடைய உரிமைகளை ஒடுக்கினார்கள்.

*பீஷ்வா பகதூர்ஷா மனக்கொதிப்பு*

நானாபத்மநாபரும், பகதூர் ஷாவும் ஆங்கிலேய வர்த்தகர்களின் அட்டூழியங்களைக் குறித்து இங்கிலாந்துக்குத் தங்கள் தூதுவரை அனுப்பி முறையிட்டும் பயனில்லை. எனவே, அவர்கள் மனக்கொதிப்பு அடைந்து ஆங்கிலேயரைக் கவிழ்க்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள்.

4

அந்நிலையில் ஜான்ஸிநாட்டின் அரசியான இலட்சுமி தேவி சந்ததியற்றுப்போய் ஒருவரைச் சுவீகாரம் செய்து கொண்டார். ஆங்கிலேயர் அதனை ஏற்காமல் அவருடைய அரசைப் பறித்துக் கொண்டார்கள். ஆகையால் அவ்வீர மாதும் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவந்தார். வாணிப நிமித்தம் நம் நாட்டுக்கு வந்து இங்குள்ளவர்களை அடிமையாக்கி, அவர்களுடைய அரிய பெரிய பரம்பரை உரிமைகளைக் கவர்ந்து நாடுபிடிக்கும் நாட்டங் கொண்டுள்ள ஆங்கிலேயருக்கு அடிமைகளாக இந்தியர்கள் வாழ்வதை விடச் செத்து மடிவதே சிறப்பு என்று இலட்சுமி தேவி ஆங்காங்குச் சென்று கூறி வந்தார்.

*ஜான்ஸி இராணி சுவீகார ரத்து*

ஆங்கிலேய வர்த்தகர்கள் இந்தியச் சிப்பாய்களின் துணையைக் கொண்டுதான் இந்தியர்களை அடக்கி வந்தார்கள். ஆயினும் இந்தியச் சிப்பாய்களைவிட ஆங்கிலேயச் சிப்பாய்களுக்குத்தான் சம்பளம் படி உணவு வசதி, ஓய்வு முதலியன மிகுதி. இது கண்டு இந்தியச் சிப்பாய்கள் மனம் புழுங்கினார்கள்.

*இலட்சுமி தேவி ஆவேசம்*

தவிரவும், சிப்பாய்கள் உபயோகிக்கவேண்டிய தோட்டாக்கள் இந்துக்களுக்குப் புனிதமான பசுவின் கொழுப்பும், முகமதியர்க்கு வெறுப்பைக் கொடுக்கும் பன்றியின் கொழுப்பும் பூசி ஒட்டப் பெற்றிருந்தன. அவற்றைக் கையாள நேர்ந்ததிலும் சிப்பாய்கள் மனம் கசந்து நின்றார்கள்.

*சிப்பாய்கள் மனக்கொதிப்பு*

இவ்வாறெல்லாம் பலவகையிலும் உரிமைகளையும், சுயேச்சையையும், சொத்து உரிமைகளையும் தங்க

ளுக்குப் பழக்கமான அரச, பிரபு, பரம்பரைகளையும், இழந்து தவித்த இந்திய மக்கள் கைம்பெண்கள் மறுமணம் புரியலாமெனவும், பத்தினிகள் உடன்கட்டை ஏறலாகாது என்றும், செய்த திருத்தங்களால் தங்கள் மத உரிமைகளுக்கும் கேடு விளைந்ததென்று சீறி எழுந்தனர்.

*மதச்சார்புக் குறைகள்*

மேற்கூறியவாறு பலவகையிலும் சுதந்தரமும் வாக்குரிமையும் இழந்து, மனம் வெம்பி, சினங்கனிந்து, ஆவேசங் கொண்ட மக்களுடைய கோபத் தீயானது 1857-ம் ஆண்டு கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. மீரத் என்னும் நகரில் உள்ள படை வீட்டில் இருந்த சிப்பாய்களே முதல் முதல் சீறி எழுந்தார்கள். ஆங்கிலேயரை அழித்தார்கள். டில்லி நோக்கிப் பாய்ந்தனர். சிப்பாய்களுடன் பொதுமக்களும் கலந்துகொண்டனர். அவ்வாறே நாடு எங்கும், ஆங்காங்குள்ள படைவீடுகளில் உள்ள சிப்பாய்களின் தலைமையில் கிளர்ச்சிகளும் கலகங்களும் நடந்தன. ஆங்காங்குத் தங்கியிருந்த ஆங்லேயர் கொலை செய்யப் பெற்றனர். தப்பியவர்கள் ஓடி மறைந்து வசிக்கலானார்கள். அவர்கள் இருப்பிடங்கள் வியாபார ஸ்தலங்கள் முதலியன தகர்க்கப் பெற்றும், தீக்கிரையாகியும் அழிந்தன.

*1857-ல்மீரத் எழுச்சி*

*கலகம்*

அதற்கு எதிராக ஆங்கிலேயர் பழிக்குப் பழி வாங்க நம்மவரின் உடைமைகளைக் கொளுத்தி ஊர்ஊராகப் பொசுக்கினார்கள். இந்தியர்களைக் கண்ட கண்ட இடத்தில் எல்லாம் கொன்று குவித்தார்கள்.

*பழிக்குப் பழி*

67603

*நாட்டின் அவதி*

1857-ம் ஆண்டில் தொடங்கிய கலகம் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து நடந்தது. அதனால் இருதிறத்தாரும் இலட்சக் கணக்கான மக்கள் மடிந்தனர். செல்வர்கள் தங்கள் உடைமைகளை இழந்து தவித்தார்கள். கொள்ளை நோய்களும் பட்டினிப் பஞ்சமும் நாட்டில் தாண்டவமாடின. இவற்றிடையே யாதுமறியாத மக்கள் துப்பாக்கிக் குண்டுக்கும் பீரங்கிக்கும் இரையானதுமட்டும் குறையவில்லை.

*ஒரு சுதந்தரப் போர்*

1857-ம் ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் நிகழ்ந்தது ஒரு தேசீய சுதந்தரப் போரேயாகும். பல வகையிலும் உரிமைகளை இழந்து தவித்த நம் முன்னோர்கள் தங்கள் மனக் கொதிப்பால் நடத்திய போராட்டமே யாகும். ஆயினும் ஆங்கிலேயர் அதனை ஓர் இராணுவக் கிளர்ச்சியாகக் கூறிச் சிப்பாய்க் கலகம் எனப் பெயரிட்டனர்.

*ஆங்கில அரசினர் கண்விழிப்பு*

போரின் பெயர் எதுவாயினுஞ் சரி, அதன் காரணத்தையும், அதனை நடத்திய மக்களின் உள்ளத்தின் நிலைமையையும் ஆங்கிலேயர் உள்ளபடி உணர்ந்து கொண்டார்கள். அதுவரையில் நாடு பிடித்து ஆட்சி நடத்திய ஆங்கிலேய வர்த்தக சங்கத்தார் நாடாளத் தகுதியற்றவர்கள் என ஆங்கில அரசினர் முடிவு செய்தனர்.

*ஆங்கில அரசினர் உண்மை உணர்வு*

1857 கிளர்ச்சி அயல் நாட்டின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறியவும், தங்கள் நாட்டின் ஆட்சியைத் தாங்களே நடத்தவும், தாங்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெறவும் இந்தியப் பொதுமக்கள் செய்த மாபெரும் போர் எனவும்

ஆங்கில அரசினர் உணர்ந்தனர். இந்தியரின் நல்லுணர்வையும் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றாலன்றி இங்கே ஆங்கிலேயர் எந்தக் காரணத்தைக் கொண்டும் வாழமுடியாது எனவும் உணர்ந்தனர்.

எனவே, இந்தியாவில் அதுவரையில் ஆங்கிலேய வர்த்தக சங்கத்தார் ஆதிக்கம் செலுத்திவந்த நிலப்பகுதிகளை ஆளும் உரிமையை ஆங்கில நாட்டு அரசுதானே ஏற்றுக்கொண்டது. அதன்படி 1858-ல் ஆங்கில நாட்டு அரசியான [1]விக்டோரியா இந்திய நாட்டின் பேரரசியானாள். அவர் இந்திய மக்களுக்குச் சாசனமாக ஒரு உரிமை அறிக்கை வெளியிட்டார். அப்போது இங்கு ஆட்சி நடத்திய [2]கானிங் பிரபு 1858 நவம்பர் 1 தேதி யன்று [3] அலகபாத் நகரில் இந்திய உள்நாட்டு மன்னர்களைக் கூட்டி, விக்டோரியா பேரரசியரின் சாசனத்தைப் படித்துக் காட்டி, அதனை நாடெங்கும் பறையறைவிக்கவும் செய்தார்.

*ஆட்சி மாற்றம் விக்டோரியா பிரகடனம் 1858*

அச்சாசனத்தின் முக்கியக் குறிப்புகள், இங்கிலாந்தின் அரசாங்கத்துக்கு உட்பட்டு இந்திய நாட்டின் ஆட்சியை இந்திய அரசப் பிரதிநிதி நடத்துவார். அவர் இந்திய மந்திரி என்னும் இங்கிலாந்து தேசமந்திரி ஒருவர்க்குப் பொறுப்பானவர். அந்த இந்தியா மந்திரிக்கு ஆலோசனை கூற ஒரு சபை அமையும். இந்திய நாட்டு அரசர்களின் உரிமைக்கும் மதிப்புக்கும் குறைவு செய்வதில்லை. இந்திய நாட்டு மக்களின் மத விஷயங்களில் அரசாங்கம் தலையிடுவதில்லை. அரசியலில் அலுவல்கள் இந்தியருக்கும் வழங்கப் பெறும். இந்தியக் கைத்தொழில்கள்

*சாசனத்தின் அம்சங்கள்*

[1] Victoria, [2] Lord Canning, [3] Allahabad.

விருத்தி செய்யப் பெறும். மக்களின் நலத்துக்காகவே ஆட்சி நடை பெறும். இந்திய மக்களின் நன்மையும் நலமுமே ஆட்சியின் வலிமை. இந்திய மக்களின் நன்றியே ஆங்கில அரசரின் அமைதி. இத்தகைய பறையறையைக் கேட்ட மக்கள் ஓரளவு அமைதி யடைந்தனர். ஆயினும் அயல் நாட்டார் ஆதிக்கமும், அவர்கள் ஆட்சியில் தங்களுக்கு வாக்குரிமை இல்லையே என்ற ஏக்கமும் நம்மவரை வருத்தின.

*இந்தியர் மன நிலை*

ஒரு சில காலம் வரையில்தான் அரசப் பிரதிநிதிகள் விக்டோரியா பேரரசியின் சாசனப்படி நடந்துகொண்டார்கள். பின்னர் அவர்கள் தம்மனம்போல நடக்கத் தலைப்பட்டனர்.

ஆகையால் மக்களிடையே ஓரளவு அமுங்கி இருந்த சுதந்தர உணர்ச்சி மீண்டும் தோன்றியது. அதன் பயனாக 1880-ல் ஒரு கலகமும் நடந்தது.

மீண்டும் கலகத்தைக் கண்ட ஆங்கிலேயர் அச்சம் அடைந்தார்கள். மறுபடியும் கத்தியும், இரத்தமும், குண்டும் கொலையும் இந் நாடெங்கும் பரவுமே எனப் பயந்தனர். எவ்வாறேனும் 1857—58 நிலைமை மறுபடியும் ஏற்படாமல் பார்க்க ஆங்கிலேயர் அவாக் கொண்டனர். அவர்களுள் ஹியூம், வெட்டர்பன் என்பவர் இருவர். அவர்கள் சுதந்தர உணர்ச்சி மிகுந்த இந்திய மக்களை நோக்கி, ''நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உங்கள் பலவகை உரிமைகளையும் முறையாகக் கேளுங்கள். ஒரு நிலையம் அமையுங்கள். அதன் வழியே உங்கள் உரிமைகளைப் பெற முயலுங்கள்'' என்று கூறினார்கள். அவர்களின் எண்ணம்

*மீண்டும் கலகம்*

*ஹியூம் வெட்டர்பன்*

என்னவோ ! இந்தியர்கள் பலவகைச் சாதி சமயத்தினர். அவர்கள் ஒன்று கூடுவதெங்கே! நிலையம் அமைப்ப தெங்கே ! என்பதோ, அன்றி உள்ளபடியே பலரும் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதோ ! அவர் கள் எண்ணம் ! எவ்வாருயினும் அவர்கள் சொல் லிக் கொடுத்த வழியை நம்மவர்கள் மேற்கொண் டார்கள். 1773-ம் ஆண்டில் அமெரிக்கர் பிலடெல்பியா நகரில் கூடித் தங்கள் சுதந்தர உரிமைகளை வெளியிட்ட சபைக்குக் காங்கிரஸ் என்று பெயர் என்று முன்னம் அறிந்தோமல்லவா! அப் பெயரா லேயே இந்திய நாட்டுத் தேசிய காங்கிரஸ் என்னும் பெயரால் ஒரு சபையைத் தோற்றுவித்தார்கள்.

*காங்கிரஸ்*

## இந்தியக் காங்கிரஸ் தோற்றம்

ஆங்கிலேயரான வெட்டர் பென் ஹ்யூம் என்பார். கூறி யவாறே இந்தியப் பெருமக்களுள் பலரும் நினைத்தார்கள். அவர்கள் அனைவரும் நம் சென்னை நகரில் கூடிக் காங் கிரஸ்மகாசபை அமைப்பதெனத் தீர்மா னித்தார்கள். எனவே, 1885-ம் வருஷம் டிஸம்பர்மாதம் பம்பாயில் காங்கிரஸ் மகா சபை கூடியது. அதற்கு நம் நாட்டின் பற்பல பாகத்திலிருந்தும் பெருமக்கள் பலர் வந்திருந்தனர். அது முதல் முறையான இந்தியச் சுதந்தரப் போர் தொடங்கியது.

*காங்கிரஸ் முதற் கூட்டம் 1885*

காங்கிரஸ் மகாசபை வருஷா வருஷம் ஒவ்வொரு நகரில் கூடும். ஆரம்பத்தில், ஆங்கிலக் கல்வி கற்றவர் களே அதில் உறுப்பினராயிருந்தனர். அவர்கள் அரசாட்சியில் பதவிகள் தேடிக் கொள்ளவும், தனிச் சலுகை பெறவும்

*ஆரம்ப நிலை*

கருதியே காங்கிரசில் சேர்ந்தார்கள். ஹியூம் என்னும் ஆங்கிலேயர் இருபத்தைந்து வருஷ காலம் வரையில் அதன் காரியதரிசியாக இருந்து வந்தார். காங்கிரசில் முதன்மையாக இருந்த இந்தியப் பெருமக்களை அரசாங் கம், தனிப்பட்ட முறையில் மகிழ்வித்து அவர்களைத் தங் கள் சார்பில் மடக்கிக் கொண்டிருந்தது.

*மித வாதிகள் அமித வாதிகள்* ஆயினும் சிலர் நாட்டின் குறைகளையும் ஆங்கில ஆட்சியிலிருந்து சுயேச்சை பெறவேண்டியதுபற்றியும் காங்கிரசில் கிளர்ச்சி செய்தார்கள். அவர்கள் அமிதவாதிகள் என்றும், ஆங்கில அரசுக்குச் சார்பாக நடந்து நலம் பெற்றவர்கள் மிதவாதிகள் என்றும் பெயர் பெற்றனர். அவர்களின்



தொகை மிகுதியாக இருந்தமையால் அமிதவாதிகளின் பேச்சும், கொள்கைகளும் ஓங்க இடமில்லாமற் போயிற்று.

அமிதவாதிகளுள் லோகமான்ய பால கங்காதர திலகர், அரவிந்த கோஷ், லாலா ஜபதிராய் முதலிய பெரு மக்கள் குறிப்பிடத் தக்கவர்கள். திலகர்

*திலகர் பெருமான்*

பெருமான் சிவாஜியின் மராட்டிய மரபில் தோன்றிய வீரர். அவர் "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவேன்" என்று வீர முழக்கம் செய்வார். மற்றையோரும் அவ்விதமே. ஆயினும் அரசினர் கையில் சிக்குண்டு இருந்த மிதவாதிகள் இக் கொள்கைகளைப் பொருட்படுத்தவில்லை. அவர்களுக்கு நாட்டு மக்களின் நியாயமான துடிப்பும் விழிப்பும் புலனாக வில்லை. அவர்களுடைய துணையைப் பெற்ற அரசினர் அமிதவாதிகளை அடக்கியொடுக்க முயன் றனர். அதற்கான சட்ட திட்டங்களையும் அமைத்து வந்தனர். அது கண்டு தேச மக்களிடையே மிகுந்த பரபரப்பு ஏற்பட் டது. வாலிபர்கள் கொதித்தெழுந்தனர். எங்கும் சுய ராஜ்ய கோஷமே நிறைந்திருந்தது.

*சுயராஜ்ய கோஷம்*

காங்கிரஸ் சபையையும் அமிதவாதிகளையும் ஒடுக்கி ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் அரசாங்க அதி காரிகளுக்கு வளர்ந்து வந்தது.

அந்நிலையில் வங்காளிகள் ஆங்கிலேய வாணிபச் செருக்கையும் செல்வத்தையும் குலைத்தால் அவர்கட்கு நலிவு ஏற்படும் என்று "சுதேசி இயக்கம்" என்ற கிளர்ச்சி யைத் தோற்றுவித்தார்கள். இந்தியர்கள் வெளிநாட்டுச் சாமான்களை வாங்காமல் நிராகரித்தல்; ஆங்கிலக் கல்வி யைக் கற்காமல் இந்தியக் கல்வி கற்றல், சுயராஜ்யம் பெற்றே தீருவது என்ற உறுதி கொள்ளுதல், என்பன அவ்வியக்கத்தின்


*சுதேசி இயக்கம்*

முக்கிய கொள்கைகளாம். வங்காளத்தில் தோன்றிய அந்த இயக்கம் வங்காளம் முழுவதும் பரவியது மல்லாமல் இந்தியா வெங்கும் பெருங் கிளர்ச்சியாகப் பெருகியது. அது கண்ட அரசினர் கலக்கமடைந்தார்கள். நாடெங் கும் வீர சுதந்தரப் பாடல்களும், அன்னியப் பண்டங்களைக் கொளுத்துதலும் மலிந்தன. இவற்றை யெல்லாம் அடக்க முயன்ற அதிகாரிகள் ஒன்றும் செய்ய இயலாது தவித்தார்கள்.

*மிண்டோ மார்லி திருத்தங்கள் 1909*

கிளர்ச்சியாளர்களின் கண்ணைத் துடைப்பது போல 1909-ம் ஆண்டில் நம்மவரை ஆட்சியில் கலந்து கொள்வதாகக் காட்டி மிண்டோ மார்லி திருத்தங்கள் என்ற பெயரால் ஒரு சட்டம் இயற்றினார்கள்.





அச்சட்டப்படி அரசினர் மிதவாதிகளைக் கைக்குள் அடக்கிக் கொண்டு பாலகங்காதர திலகர் முதலிய தலை

வர்களைச் சிறைப்படுத்தினர். வேறு பலர் தலைமறைவாக வாழ்ந்தனர்.

*தென்னாட்டுத் தலைவர்கள்*

தமிழ் நாட்டில் தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை, தேசீய சுப்பிரமணிய பாரதியார் முதலானவர்கள் கடுங்காவல் தண்டனை பெற்றார்கள், வங்க இளைஞர் பலர் வதைக்கப் பெற்றார்கள். வாலிபர்களும் கல்லூரி மாணவர்களும் விசாரணையும் நீதிபதியின் தீர்ப்புமின்றிச் சிறை செய்யப்பட்டார்கள்.

*அந்நிய நாட்டில் இந்தியர் விழிப்பும் துடிப்பும்*

நம் நாட்டு நிகழ்ச்சிகளை யெல்லாம், வாணிப நிமித்தமும் அலுவல்களைத் தேடியும், பொருள் தேடியும், கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் சென்றிருந்த இந்தியர் அனைவரும் கூர்ந்து நோக்கினார்கள். அவர்கள் பெருந்திரளாக வசித்த அந்த வெளி நாடுகளில் தமக்குரிய உரிமைகளைப் பெறத் தாய்நாடகிய இந்தியா சுதந்தரம் அடைதல் இன்றியமையாத தாகும் என்று எண்ணி இந்தியச் சுதந்தர இயக்கத்துக்குச் சலுகையும், ஆதரவும் காட்டினார்கள். அவர்களுள் தென்னாப்பிரிக்க இந்தியர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.


*தென்னாப்பிரிக்கா*

தென்னாப்பிரிக்க இந்தியர்களின் தலைவராக விளங்கியவர் மோஹன் தாஸ் கரம் சந்த் காந்தி என்பவர். அவர் தம்முடைய வழக்கறிஞர் தொழிலை முன்னிட்டுத் தென்னாப்பிரிகா சென்றவர், அங்கே வெள்ளையர் நம்மவரை நடத்தும் இழிவையும், கொடுமையையும் கண்டு, மனம் வெதும்பி, நேடால் காங்கிரஸ் என்ற ஒரு சபை ஏற்படுத்தி

இந்தியர்கள் தென்னுப்பிரிக்காவில் வாழ வகை

காந்தி

தேடியவர். அவரும் அவருடைய தொண்டர்களும் தென்னுப்பிரிக்காவில் அடைந்த சிறுமைக்கும், துயரத்திற்கும் ஓரளவில்லை. ஆயினும்



காந்தியடிகள் தமக்கு இன்னலும், சிறுமையும் விளேத்தவரை ஒறுத்தல் கூடாது என்று தம் அன்பர்கட்கும் நண்பர்கட்கும் அறிவுறுத்தினுர்.

> "இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்"

என்பது சான்ருேர் செயல் அல்லவா?

பிறரைத் துன்புறுத்தாமை, பொறுமை, அறமுறையில் அடக்குமுறையை எதிர்த்தல் என்ற சீரிய முறைகளேக் கைக்கொண்டு அவர் தென்னுப்பிரிக்காவில் அருந்

தொண்டு செய்தார். அவருடைய சகிப்புத் தன்மையையும், அறநெறியும், தொண்டுத் தன்மையையும் கண்ட வெள்ளை அரசினர் வெட்கினர்.

தென்னாப்பிரிக்க இந்தியரின் குறைகளை வெளியிடக் காந்தியடிகள் 1904-ம் ஆண்டில் ஒரு வாரப் பத்திரிகையையும் தொடங்கினார்.

காந்தியடிகள் 1914 வரையில் தென்னாப்பிரிக்காவில் தொண்டாற்றிப் பின் இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவுக்குத் திரும்பிய காந்தியடிகள் 1915ல் கூர்ஜரத்தைச் சேர்ந்த சபர்மதி என்னும் நதிக்கரையில் சத்தியாக்கிரக ஆச்சிரமம் ஒன்றை ஏற்படுத்தி, மக்களைத் தமது வழிகளில் பழக்கும் முறைகளில் ஈடுபட்டார்.

சபர்மதி ஆச்சிரமம்



இக் காலத்தில் பால் கங்காதரர், அன்னிபெஸன்ட் அம்மையார் முதலானோர் 'உள்நாட்டினரின் ஆட்சி'

என்ற இயக்கத்தைத் தொடங்கினர். நாடெங்கும் ஆங் காங்குச் சங்கங்கள் நிறுவப் பெற்றன.

*ஹோம்ரூல்*

சென்னை அரசினர் அன்னிபெஸண்ட், வாடியா, அருண்டேல் முதலிய தலைவர் களைச் சிறையிலிட்டார்கள். ‡ சுதந்தரக் கிளர்ச்சி அடங்க வில்லை. அடங்குவதற்கு மாறாக வலுத்தது.

1914-ல் ஐரோப்பாவில் போர் மூண்டது. அந்நாளில் எல்லாம் காந்தியடிகள் அரசரது கோல் நோக்கி வாழும் குடியாக இருந்தார். ஆங்கிலேய அரசி

*1914 ஐரோப்பியப் போர்*

னர் ஐரோப்பாவுடன் போர் புரியும் பொழுது அவர்களுக்கு வேண்டிய ஒத் தாசை செய்யவேண்டியது நமது கடமை என அவர் எண்ணினர்.

ஆங்கிலேய அரசினரும் இந்தியாவும் போரில் கலந்து கொள்ளவேண்டும். ஆள்படை, பொருள் பண் டங்கள் முதலியன கொடுத்து உதவ வேண்டும். போர் முடிந்தவுடன் இந்தியச் சுதந்தர உணர்ச்சிக்கு ஏற்ற திருத் தங்கள் செய்து நம் நாட்டு ஆட்சியில்

*இந்தியா உதவி*

நமக்குப் போதிய உரிமை கொடுப்பதாகச் சொல்லி வந்தார்கள், காந்தியடிகள் அதை நம்பினர். ஆனல் அமிதவாதிகள் ஆங்கிலேயர் சொன் னதை நம்பவில்லை. அவர்கள், கிளர்ச்சி செய்ய அந்த ஐரோப்பியப் போர் நெருக்கடிதான் ஏற்ற தருணம் என்று நினைத்தார்கள்.

நம் நாட்டு மக்களிற் பலர் வெடிகுண்டு, ஆயுதங் கள் தயாரித்துக் கொண்டார்கள். வெளி நாட்டிலிருந்த இந்தியர்கள் ஆயுதங்களுடன் இங்கு வந்து இந்தியச் சிப்

---

‡ Home - rule.

பாய்களைத் தூண்டினார்கள். ஜெர்மானியர் வேண்டிய இரகசிய உதவிகளைச் செய்தார்கள்.

அந்நிலையில் ஐரோப்பியப் போர்- முதற் பெரும் போர் முடிவுற்றது. இந்திய அரசினர் ரௌலட் சட்டம் என்ற புதியதொரு சட்டத்தைச் செய்தனர். அதன்படி இந்தியர் சிலர் ஒன்று கூடிப் பேசுவது கூடக் குற்றமாகப் பெற்றது. எந்த இந்தியரையும் காரணம் சொல்லாமல், விசாரணையின்றிச் சிறைப்படுத்தலாம். இதைக் கண்ட இந்தியர் 'இலவு காத்த கிளியானோம்' என மனம்

*ரௌலட் சட்டம்*



புழுங்கினார்கள். காந்தியடிகளும் தாம் நம்பியது வீணாயிற்று என மனம் நொந்து போனார். தாம் நோயுற்றிருந்தும் உடனே இந்திய உரிமைக்காக அருள் நெறிப்போர் (சத்தியாக்கிரகம்) தொடங்க விரும்பினார். அதற்காக வல்லபாய் பட்டேலுடன் யோசித்து ஓர் ஆலோசனைக் கூட்டம் கூட்

*காந்தியடிகள் சத்தியாக்கிரகம்*

டினர். அக் கூட்டத்திற்குப் படேல், சரோஜினி தேவி முதலிய ஒரு சிலரே வந்திருந்தார்கள். அதன் பின்னர்த் தம்முடைய அறப்போர் முறைகளை நாடெங்கும் விளக்குவதற்காகச் சுற்றுப் பயணம் புறப்பட்டார். சுதந்திரப் போராட்டமானது பிறர் வருந்தா வண்ணம் நடைபெறவேண்டும். உரிமைப் போர்வீரர் பிறர்க்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது. அவர்கள் தமக்கு ஏற்படும் எவ்விதத் துன்பத்தையும், துயரத்தையும் சகித்துக் கொண்டு பொறுமையுடன் போர்புரிய வேண்டும். சிறை செல்லப் பின்வாங்கலாகாது என்று நாடெங்கும் முழக்கம் செய்தார். துன்புறுத்தி, பிறரை வருத்திப் பயன் பெற இயலாது. தாம் துன்புற்று வருந்திக் கொள்கைகளையும் முறைகளையும் தளரவிடாமல், அரசினருடன் ஒத்துழைக்காமல் போராடினுல்தான் நாடு நலமடையும் என்பது காந்தியடிகளின் துணிபு.

*சத்தியாக்கிரகக் கொள்கைகள்*

இவ்வாறு நாடெங்கும் சுற்றிவருகையில், சென்னைக்கு வரவேண்டுமென்று காந்தியடிகள் பல பெருமக்களால் அழைக்கப் பெற்றிருந்தார். அதன்படியே சென்னைக்கு வந்தார் காந்தியடிகள். அப்போதுதான் காந்தியடிகளுக்கும் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியருக்கும் நட்பு ஏற்பட்டது. அந்த நட்பு 'இருநிலம் பிளக்கும் படியான வேராக ஊன்றிச்' சிறந்ததொரு உலகியல் தொடர்பாக உறுதி பெற்றது. ராஜாஜி இல்லத்தில்தான் காந்தியடிகள் தங்கினுர். அப்போது ஒத்துழையாமை அறப்போர் தொடங்குமுன் நாடெங்கும் ‡ வேலைநிறுத்தம் நடத்தி மக்கள் அனைவரும் ஒருநாள் பட்டினி நோன்பு இருக்கவேண்டு

*ராஜாஜி*

‡ Hartal.

மென்று தமக்குத் தோன்றியதாகக் காந்தியடிகள் ராஜாஜி யிடம் தெரிவித்தார். அவரும் அதனை ஏற்றார். இது



தான் காந்தியடிகள் முதன் முதல் மேற்கொண்ட போர் முறை. காந்தியடிகளும் ராஜாஜியும் ஒத்து முடிவு செய்த வாறு 1919-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந் தேதி இந்தியா வெங்கும் மக்கள் வேலை நிறுத்தஞ் செய்தார்கள். காலை யில் இறைவனைத் தொழுது பட்டினி கிடந்தார்கள். ஆனால் அகமதாபாத் ஆலைத் தொழிலாளர் கலகம் விளைத்தார்கள். காந்தியடிகள் அதற்காக மிகவும் வருந்தினார். மக்கள் அற நெறிப் போக்கு பக்குவமடையவில்லை என உணர்ந்தார். அவர்கள் பக்குவமடையுமுன் அவர்களை உரிமைப்போர் செய்ய அழைத்தது பெருந்தவறு எனவும் எண்ணினார்.

அரசாங்கத்தார் காந்தியடிகளைச் சிறை செய்தார்கள். அதைப்பற்றிப் பேசுவதற்குப் பஞ்சாப் மாகாணத்தில் அமிர்தசரஸ் நகரில் ஜாலியின் வாலாபாக் என்ற தோட்

டத்தில் 1919-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ந் தேதியன்று நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். அத் தோட்டத்திற்குப் போகவும் வரவும் ஒரே வாயில்தான் இருந்தது. அங்கே ஒரு பெரிய இயந்திரப் பீரங்கியை வைத்து ஆங்கிலேய ராணுவத்தினர் சுட்டுத் தள்ளினுர்கள். அதில் நூற்றுக் கணக்கான மக்கள் மடிந்தார்கள்; பலர் படுகாயமுற்ருர்கள். இக் கொடுஞ்செயல் தேசமெங்கும் பரவியது. மக்களின் உரிமை உணர்ச்சியைக் காட்டுத் தீப் போல வளர்த்து விட்டது.

*பஞ்சாப் படுகொலை*

இந்தக் கலவரங்களுக்கிடையில், இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு பிரபுவும் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்த செம்ஸ்போர்டு பிரபுவும் சேர்ந்து சில சீர்திருத்தங்களே அரசியலில் செய்தார்கள். அவை நம்மவர்க்குத் திருப்தியளிக்கவில்லே. ஆதலால் அவற்றை ஏற்பதில்லே எனக் காங்கிரஸ் மகாசபை தீர்மானித்தது.


*மாண்டேகு செம்ஸ்போர்டு திருத்தங்கள்*

காந்தியடிகள் உரிமைப் போராட்டத்தை மேற்கொண்டு நடத்திச் சில வழிகள் வகுத்தார்.

மாண்டேகு செம்ஸ்போர்டு திருத்தங்களின்படி அரசினர் அமைக்கும் சட்ட சபைகளில் நாம் புகுவதில்லே; ஆங்கிலக் கல்லூரிகட்கு மாணவர்களே அனுப்புவதில்லே, வெளி நாட்டுச் சாமன்களே வாங்குவதில்லே என்பன அம்முறையின் முக்கியமான அம்சங்கள்.

*ஒத்துழையாமைப் போர்*

காந்தியடிகள் முன்னணியில் இருந்து இந்த ஒத் துழையாமை முறையில் உரிமைப் போரை நடத்தினார். அவர் வகுத்த வழியே காங்கிரஸ் மகாசபையினரும் தொண்டாற்றி வந்தார்கள். அந்தக் கிளர்ச்சியைக் கண்டு அரசாங்கம் நிம்மதி இழந்தது. ஆயினும் காங்கிரசில் அப்போது சேராத ஒரு சிலர் மாண்டேகு செம்ஸ் போர்டு திருத்தங்களின்படி ஏற்பட்ட சட்டசபைகளில் புகுந்து கொண்டு அரசாங்கத்துடன் ஒத்துழைத்தார்கள். அதனால் அரசினர்க்கு ஓரளவு அமைதி ஏற்பட்டது.



சுயராஜ்யக் கட்சி

அப்போது சிறையிலிருந்து வெளிவந்த பண்டித மோதிலால் நேரு, சித்திரஞ்னதாஸ் முதலானவர்கள் சுய ராஜ்யக் கட்சி என்று ஒரு சட்டசபைக் கட்சியை அமைத்தார்கள். அக்கட்சி யினர் சட்டசபைக்குள் புகுந்து அரசாங் கத்தை எதிர்த்துப் போராடினார்கள். அது கண்டு

வெள்ளையர் அரசாங்கத்தாரும் இந்தியா மந்திரியும் கலங்கினுர்கள்.

இந்தியாவின் அரசியல் நிலைமையில், மக்களின் மனப் போக்கையும் தீர ஆராய்ந்து அறிந்து இந்திய நாட்டுக்கு ஏற்றதொரு அரசியல் திட்டத்தை அமைத்

*சைமன் கமிஷன்* துத் தர ஸர் ஜான் சைமன் என்பவர் தலைமையில் ஆங்கிலப் பாராளும் மன்ற உறுப்பினர் எழுவர் கொண்ட சைமன் கமிஷன் என்ற சபையை இந்தியா மந்திரி நம் நாட்டுக்கு அனுப்பினுர்.

நம்மிடைய அரசியல் தாபத்தையும், நம் மனநிலையையும் கண்டறியவும் நாட்டுக்கு ஓர் அரசியலை வகுக்கவும், பெயர் அளவுக்குக்கூட இந்தியர் ஒருவருமில்லாத அந்த வெள்ளையர் கமிஷன் நியமனத்தை காங்

*காங்கிரஸ்* கிரஸ் சபை எதிர்த்தது. அதன் அலுவல்

*ஒத்துழையாமை* களில் ஒத்துழையாமல் அதனை நிராகரித்தது. காங்கிரஸில் சேராத ஒரு சிலர் அக்கமிஷனுக்கு வேண்டிய ஆதரவு தந்தார்கள். ஆயினும் அக்கமிஷன் தான் வந்த முழுப்பயனையும் பெருது போயிற்று.

சட்டத்தை ஒட்டிப் புரிந்த போர் போதிய பயனைத் தாரது போகவே மீண்டும் சட்டமீறிய போர் முறையைத் தொடங்கினுர் காந்தியடிகள்.

மக்கள் அனைவர்க்கும் இன்றியமையாது வேண்டுவது உப்பு. அது இயற்கையில் கடல் நீரிலிருந்து எவ்விதப் பொருட் செலவுமின்றிக் கிடைப்பது. அதனை

உற்பத்தி செய்வது இந்தியாவில் அரசினரின் தனி உரிமையாயிருந்தது.

அந்த உரிமையைத் தொலைக்க மகாத்மா உறுதி செய்து கொண்டார். எல்லோரும் உப்புச் சட்டத்தை மீறி உப்புக் காய்ச்சும் உரிமையைக் கைப் பற்ற வேண்டுமென்று கூறினர். தாமும் தொண்டர் சிலருடன் தண்டி என்ற கடற் கரைப் பட்டினத்தில் உப்பு எடுக்கப் புறப்பட்டார்.

*உப்புப் போர்*

மகாத்மா காந்தியடிகளைப் பின் பற்றித் தேசமெங்கும் ஆங்காங்கு கடலோரங்களில் மக்கள் உப்பைக் காய்ச்சி னார்கள். தமிழ் நாட்டில் வேதாரணியத்தில் ராஜாஜி தலை மையில் உப்புப் போர் நடந்தது.

மகாத்மா காந்தி தம் நோக்கங்களையும் முறைகளை யும் விளக்கி முன்னதாகவே அரசாங்கத்துக்கு எச்சரிக் கைக் கடிதம் எழுதிப் பின் தண்டிக்குப் போனார். அதற்குள் அயல் நாட்டினர் இப் போரை அறிந்து அதன் முறையைக் கூர்ந்து நோக்கின. அயல் நாட்டுப் பத்திரி கைகள் அப்போரின் விவரங்களை உலக முழுதும் பறை சாற்றின.

*அயல் நாட்டினர் ஆர்வம்*

அரசினர் வழக்கம் போல மகாத்மா முதலான தலை வர்கள் பலரையும் சிறை செய்தார்கள். ஆயினும் போரின் உறுதியும், வேகமும் ஓரளவும் தளரவில்லை.

அதுகண்ட அரசினர் அமைதியை நிலை நாட்ட எண்ணினார்கள். அப்போது அரசப் பிரதிநிதி

இர்வின் பிரபு என்பவர். அவர் மகாத்மாவுடன் ஓர் ஒப்பந்தம் எழுத்து மூலமாகச் செய்து கொண்டார். அதன்படி மக்கள் தங்கள் சொந்த உபயோகத்துக்கு வேண்டிய அளவு உப்பைக் காய்ச்சிக் கொள்ள உரிமை பெற்றார் கள். இதற்குக் காந்தி இர்வின் ஒப்பந்தம் எனப் பெயர்.

*காந்தி இர்வின் ஒப்பந்தம்*

அடுத்தபடியாக நம் நாட்டின் அரசியலை வகுக்க லண்டனில் வட்டமேஜை மகாநாடு ஒன்று கூட்டுவதாக வும் அதற்கு மகாத்மா காந்தியடிகளும் வரவேண்டுமென்று அழைத்தார்கள். அவ் வாறே மகாத்மா காந்தியடிகள் சென்றார். ஆனால் நம் நாட்டினர் சுதந்தர தாபத் தைத் தணிக்கும் வகையில் அங்கு எதுவும் நடைபெற வில்லை.

*வட்டமேஜை மாநாடு*

மகாத்மா நம் நாடு திரும்பியதும் உரிமைப் போர் தொடுத்தார். அரசாங்கமும் அவசரச் சட்டங்கள் பிறப் பித்து அடிதடி, துப்பாக்கிப் பிரயோகம், சிறையிடல் முதலிய முறைகளைக் கையாண்டது. ஆனால் இயக்கமும் உரி மைப் போரும் வலுத்ததே தவிர அடங்கவில்லை.

*உரிமைப் போர் வலுத்தல்*

இத்தனைக் குழப்பங்களுக்கு மிடையில் இந்திய உரி மைச் சங்கமாகிய காங்கிரஸ் மகாசபை வருஷந் தவறாது தேசத்தில் ஆங்காங்குக் கூடிச் சுதந்தரக் கிளர்ச்சித் திட்டங்களை வகுத்து வந்தது. அதன் பெருக்கத்தையும், அதன் தீர்மா னங்களையும் அதன் ஆக்க நிர்மானத் திட்டங்களையும் நோக்கினால் அச்சபை யின் வலுவும் வன்மையும் நன்கு புலனா கும். கதர்த் திட்டம், குடிசைக் கைத் தொழில்

*காங்கிரஸ் திட் டங்கள். அதன் பெருக்கமும் வலிவும் 1885-1935*

திட்டம், தீண்டாமை யொழிப்பு, ஹரிஜன முன்னேற்றம், இந்து முஸ்லீம் ஒற்றுமை, கட்குடியொழிப்பு, தலியன முநாடுநகரங்கள், சின்னஞ்சிறு கிராமங்கள் எங்கணும் பரவி, ஒருங்கே அரசியல், சமூகம் இவற்றின் நலத்தைப் பண்படுத்தின.

1885-ம் ஆண்டில் தோன்றிய காங்கிரஸ் மகாசபை 1935-க்குள் அதாவது அரை நூற்றாண்டுக்குள் இந்திய ஆட்சி உரிமைத் துறையிலும், மக்களை ஒன்று திரட்டும் வகையிலும், உள்நாட்டுச் செல்வத்தைப் பெருக்குவதிலும் அரும் பெருஞ் சாதனைகளைச் சாதித்திருக்கிறது.

இவ்வாறு வன்மையும், தூய்மையும் பெற்றுள்ள ஒரு ஸ்தாபனத்தைப் பொசுக்கிவிடவும் அதன் இயக்கத்தை நசுக்கி விடவும் அரசினர் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின.

*அடக்கு முறைக்கு எதிர்ப்பு*

அதனை ஒரு சட்ட விரோதமான ஸ்தாபனம் என்றும் அதில் சேர்தலும், அதன் அலுவல்களில் கலந்து கொள்ளுதலும் குற்றமாகும் என அரசாங்கம் சட்டம் பிறப்பிக்குந்தோறும் கங்கிரஸ் மகா சபையின் வலிமையும், போர்முறைகளும், ஆண்டுதோறும் கணக்கிலடங்காமல் பெருகியும் வலுத்தும் வந்தன.

*1935 சீர்திருத்தங்கள்*

இது கண்ட ஆங்கிலேய அரசினர் 1935-ம் ஆண்டில் சில அரசியல் திருத்தங்களைச் செய்தனர். அதன் அம்சங்கள் காங்கிரசின் நோக்கங்கட்கு ஏற்றவை யன்றாயினும், அப்பொழுது காங்கிரஸ் சபையினர் தம்முடைய வலுவையும் திறமைகளையும் உலகத்தார்க்கு எடுத்துக்காட்ட விரும்பினார்கள்.

ஆகவே 1935-ம் ஆண்டு சீர்திருத்தங்களின்படி நடந்த தேர்தல்களில் காங்கிரஸ்காரர்களும் கலந்து கொண்டார்கள். நம் நாட்டில் ஒன்பது மாகாணங்களில் பெருவாரியான வாக்குப் பெற்றுப் பெரும் பான்மைக் கட்சியினராகத் தேர்தல் பெற்றனர்கள். அரசியல் அமைச்சவை அமைத்து மாகாண கவர்னர்கள், தங்கள் நடவடிக்கைகளில் வீணுகத் தலையிடா வண்ணம் வரையறை செய்து கொண்டு, இரண்டு ஆண்டுகட்குமேல் காங்கிரஸ் ஆட்சி நாட்டில் நடை பெற்றது.

*காங்கிரஸ் ஆட்சி*

நம் அமைச்சர்களின் ஆட்சித் திறமையும் செயலாற்றுந் தன்மையும்,நிர்மானத் திட்டங்களையும் ஆங்கிலேயரேயன்றி உலக அரசாங்கங்கள் பலவும் பார்த்து அயர்ந்து நின்றன.

அவ்வாறு சீரிய மக்களாட்சி நம் நாட்டில் நடைபெற்று வருங் காலத்தில் 1939-ல் ஐரோப்பாவில் இரண்டாவது உலகப் பெரும் போர் மூண்டது. இங்கிலாந்து மந்திரிகள் அப்போரில் நம் நாட்டுப் பொருள்களையும் ஈடுபடுத்தி நம் நாட்டையும் அப் போரில் இழுத்து விட்டார்கள்.

*இரண்டாம் உலகப் போர் 1939*

அது கண்ட காங்கிரஸ் அமைச்சர்கள் மனம் பொருது தமது அரசியல் பதவிகளை விடுத்து வெளியேறினர்கள்.

நாட்டில் அமைதி குலைந்தது கவர்னர்களின் ஆட்சி ஆரம்பமாயிற்று. அவசரச் சட்டங்கள் தோன்றிச் சில நாட்களுக்குமுன் அமைச்சர்களாக அரசியல் நடத்தியவர்கள் சிறைப்பட்டனர்.

*காங்கிரஸ் வெளியேற்றம்*

வங்கச் சிங்கம் எனவும் நேதாஜி எனவும் சிறப்புப் பெயர்கள் பெற்ற சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஸ் தீவிர வாதிகளுள் மிகவும் முற்போக்கான ஒருவர். அவர் ஆங்



கில அரசினரால் நமக்குச் சுயராஜ்யம் வழங்கப் பெறும் என்ற நம்பிக்கையற்றவர். தீவிரமான போர் முறைகளைக் கையாண்டு நாமே நமக்கு அரசியல் உரிமை தேடிக்கொள்ள வேண்டுமென்று அவ்வப்போது வற்புறுத்தி வந்தார். அவர் இரண்டாவது உலகப் பெரும் போர் நடக்கும் காலமே இங்கிலாந்தை வளையவைக்கும் தருணம் எனக் கூறினர். ஆயினும் மகாத்மா காந்தியடிகள் தம்முடைய அருள் நெறிப் போர் முறைப்படி ஐரோப்பாவில் போர் புரிந்து தவித்துக் கொண்டிருக்கும் இங்கிலாந்தைப் பின்னும் தொல்லைப்படுத்த முன் வரவில்லை. அவர் கட்டுக்கடங்கி அவர் முறைகளைப் பின்பற்றும் காங்கிரஸ் மகாசபையும் அவரையே ஆதரித்தது. அது கண்ட மக்கள் பலரும் மனம் கலங்கினர்கள்.

சுபாஷ் சந்திரபோஸ்

அந்நிலையில் சுபாஷ் சந்திரபோஸ் தந்திரமாக நம் நாட்டை விட்டு வெளியேறி ஜெர்மெனிக்குச் சென்ருர்; ஜப்பானுக்குச் சென்ருர். மலாய் நாடுகள் ஜப்பானியரால்

பிடிபட்டவுடன் அங்கிருந்த இந்தியர்களைத் திரட்டிப் படை வீரராக்கினர். மலேயாவில் ஒரு பகுதியைப் பெற்று அங்கே இந்திய நாட்டுச் சுயராஜ்யத்தை ஏற்படுத்தினர். நாணயக்களஞ்சியமும் அமைத்தார். இந்திய மாதர்கள் ஜான்ஸிராணி இலட்சுமி தேவியின் பெயரால் ஜான்ஸிராணி மாதர் அணி என ஒரு படையாகத் திரண்டார்கள்.

*தேசியப் படைகள்*

அவர்கள் யாவரும் வீர உணர்ச்சி மிக்கு இந்தியாவுக்குள் நுழைந்து தலைநகரின்மீது பாய ஆயத்தமாயினர். மணிபுரியில் உள்ள இம்பால் நகரில் நமது கொடியையும் நாட்டினர். அவர்களை எதிர்த்துப் போராடிய ஆங்கிலப்படை தோற்றது. ஆயினும் அங்கிலையில் ஜப்பானியர் பின்வாங்க நேரிட்டதால் இந்திய தேசீயச் சேனையும் பின்வாங்க நேரிட்டது.

*இந்தியாமீது படையெடுப்பு*

இவ்வளவும் வங்கச் சிங்கத்தின் முயற்சிகள்; அவருடைய ஏற்பாடுகள்.

இந்திய நாட்டில் காவற் படையினரும் சிப்பாய்களும் மனம் சலித்து நின்றனர்.

இந்த நிலை கண்ட ஆங்கிலேய அரசினர் கிரிப்ஸ் என்பவரை இந்தியாவுக்கு வந்து இந்தியத் தேசீயத் தலைவர்களைத் தம் வழிக்குக் கொண்டுவர முயன்றனர். ஆயினும் அம் முயற்சி பலிக்கவில்லை. ஸைமன் கமிஷன் கண்ட பலனையே கிரிப்ஸ் பிரபுவும் கண்டார்.

அக்காலத்தில் ரூஸ் வெல்ட் என்ற அமெரிக்க ஜனாதிபதியும் சர்ச்சில் என்ற ஆங்கிலப் பிரதமரும் அட்லாண்டிக் சாசனம் என்று ஒரு பட்டயம் வழங்கினர்கள். விடுதலை

*அட்லாண்டிக் சாசனம்*

பெருத நாடுகளுக்குக் குடியாட்சி வழங்குவதே அச்சாசனத்தின் முக்கிய நோக்கம்.

அதன் உரிமைகளைப்பற்றி நம் தலைவர்கள் கேட்டபொழுது அச் சாசனம் இந்தியாவுக்குரியதன்று எனச் சர்ச்சில் பிரபு கூறினர்.

அதைக் கேட்ட நம்மவர்கள் மனம் கொதித்துப் பொறுமை இழந்து நின்ருர்கள். காந்தியம் பெருமான் வாக்கையும் மீறி மக்கள் கலகத்தில் இறங்கிவிடுவார்கள் போலிருந்தது. ஆகவே இறுதிப் போராட்டத்தைத் தொடங்கக் காந்தியடிகள் மனங்கொண்டார்.

*1942 ஆகஸ்டு தீர்மானம்*

1942-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி காங்கிரஸ் மகாசபை கூடிற்று. அப்போது மகாத்மா காந்தியடிகள் "வெள்ளையரே இந்நாட்டை விட்டு வெளியேறுக" என வன்மையாகப் பிரகடனஞ் செய்தார். ஆங்கிலேயரை நோக்கி அவ்வாறு கூறிவிட்டு நம்மவரைப் பார்த்து, "அவர்கள் வெளியேறும் வரையில் போராடுவோம் அல்லது மரிப்போம்" என்ருர்.

இதனைக் கேட்ட ஆங்கிலேயரும் இந்திய அரசினரும் துடித்தார்கள். காங்கிரஸ் தலைவர்களை எல்லாம் பிறர் அறியாது இரவு நேரங்களில் கைது செய்து சிறையிலிட்டார்கள்.

*கிளர்ச்சி*

தேசமக்கள் நாட்டுத் தலைவர்களைக் காணது தவித்தார்கள். உடனே கலகம் ஆரம்பமாயிற்று. ஆட்சி நிலையங்கள் தீக்கிரையாயின. ரயில் பாதைகள்; தந்திக் கம்பிகள் பாழாயின. எங்கேயும் கலகம்; அவற்றை யெல்லாம் அடக்கி ஒடுக்க அரசங்கத்தின் அடக்கு முறைகள்; அந்த அடக்கு

முறைகளுக்கு எதிராக இரட்டித்த கிளர்ச்சிகள்; கலகங்கள் தோன்றின. இதற்கு ஆகஸ்ட் கிளர்ச்சி எனப் பெயர். அரசினர் என்ன செய்தும் "ஆங்கிலேயரே வெளியேறுக" என்ற தீர்மானம் மாறவில்லை; நிலை நின்றது.

ஆகஸ்டு கிளர்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் விசாரணை வழக்குகளில் இந்திய இராணுவத்தினரே பல்வகை உதவியும் செய்தார்கள்.

அவற்றையெல்லாம் அறிந்த ஆங்கில அரசினர்க்கு விழிப்பு ஏற்பட்டது.

*ஆங்கில அரசினர் விழிப்பு*


அவர்கள் இங்கிலாந்து பாராளும் மன்ற உறுப்பினருள் பதின்மரை நம் நாட்டுக்கு அனுப்பிப் பார்த்துவரச் செய்தனர். நாளுக்கு நாள் உரிமைக் கூச்சல் நாடெங்கும் வலுத்தது. சர்தார் வல்லபாய் படேல் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டுமட்டுமன்று, ஆசியாவிலிருந்தே வெளியேற வேண்டும் என்று பிரகடனம் செய்தார்.

*ஆங்கிலேயர் விலகுதல் 1946*

இங்கிலையில் 1946-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஆங்கிலேய மந்திரிகள் இந்தியாவுக்கு வந்து நம் நாட்டை விட்டுத் தாங்கள் விலகுவதாகவும், நம் நாட்டு அரசியலை நாமே வகுத்துக் கொள்ளலாம் என்றும் கூறிக் காங்கிரஸ் சபையாரையும் முஸ்லிம் லீக் சபையாரையும் ஒத்துப் போகச் சொல்லிப் பார்த்தனர்.

ஆயினும் அவர்கள் வெளியேறுகையில் நம் நாட்டுப் பொறுப்பை பண்டித மோதிலால் நேருவின் மகனார் ஜவஹர்லால் நேருவே முன்வந்து ஏற்க வேண்டுவதாயிற்று.

*இந்திய சுதந்தரம்* 1946-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆங்கிலேயர் வெளியேற நம் நாடு சுதந்தர மடைந்தது.



பின்னர் காங்கிரஸ் மகா சபையின் சார்பில் அமைந்த இந்திய அரசியல் நிர்ணய சபையொன்று ஒரு வருஷ காலம் ஆரய்ந்து நம்முடைய குடியரசு ஆட்சி முறைச் சட்டத்தை வகுத்துள்ளது.

*வாக்குரிமை* அதன்படி வயது வந்த எல்லா ஆண்களும் பெண் களும் வாக்குரிமை பெற்றனர். மாகா ணங்களில் தனியாட்சி நடை பெறு கின்றது.

*அரசின் அம்சங்கள்* சட்டசபைகளில் உறுப்பினரின் தொகை பெருகியது.

தேர்தலுக்குப் பின் தேசீய, மாகாண ஆக்க வேலைத் திட்டங்கள் பல வகுக்கப் பெற்று நிறைவேறப் பெறுகின்றன.

நம் நாட்டு 'ராணுவம்' திருத்தியமைக்கப் பெற்றுள்ளது.

நம் அரசியல் திட்டப்படி வாக்குகள் நேரே பதிவு செய்யும் [1] சாதாரண வாக்குகள் எனவும், அதைவிடச் சிறந்த முறையில் தேரதல் நடக்கப் பதிவாகும் [2] ஒற்றை மாற்று வாக்கு எனவும் வகுத்துள்ளனர்.

ஒற்றை மாற்று வாக்கைப் பற்றி கொஞ்சம் விவரமாகப் படிப்போம்.

## 9. நம் இந்தியக் குடியரசு

நம்முடைய சுதந்தரப் போரின் வெற்றி நமது அரசியலை நாமே ஆய்ந்து அமைத்துக் கொண்ட உரிமை தான். அவ்வாறு அதனை அமைத்துக் கொண்ட முறை என்ன ? நம் நாட்டிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறிய பின் நமக்காக, நம்முடைய அரசியலை, நாமே வகுக்கும் வாய்ப்புப் பெற்றோம். கோடிக்கணக்கான நாம், பலரும் ஓரிடத்தில் ஒருங்கே கூட இயலுமா ? அதற்காக நம் வாக்குகளை அளித்துப் பிரதிநிதிகள் பலரைத் தேர்ந்தெடுத்தோம். அவர்கட்கு நம் நாட்டின் அரசியலை வகுத்துத் தரும் உரிமையையும் கொடுத்தோம். அவ்வாறு அமைந்ததுதான் அரசியல் நிர்ணய சபை எனப்பெயர்.

*சுதந்தர வெற்றி*

---

[1] General Votes [2] Single transferable Votes.

அச்சபையினரின் தீர்மானப்படி நம் நாடு ஒரு குடியரசாகவும் மாகாணங்களில் பொறுப்பாட்சியாகவும் அமைந்தன.

*இந்திய மாகாண அரசியல்*

இந்திய அரசியலின் தலைவர் ஜனாதிபதி அல்லது மக்கள் நாயகர் எனப் பெறுவர். இந்த அரசாங்கத்துக்கு இரண்டு சட்டசபைகள் உள்ளன. மக்கள் சபை அல்லது பார்லிமெண்ட் என்பது ஒன்று, அரசாங்க சபை என்பது மற்றொன்று. மாகாணத் தலைவர்கள் கவர்னர்கள். அவர்கள் ஜனாதிபதியால் நியமனம் பெறுபவர்கள். சில மாகாணங்களில் ஒரே சட்ட சபையும், வேறு சில மாகாணங்களில் இரண்டு சட்ட சபைகளும் உள்ளன. ஒன்று பொதுமக்கள் சபை, இன்னொன்று சில சிறப்புரிமைகள் கொண்ட இனத்தாரின் பிரதிநிதிகளின் சபை.

*சட்ட சபைகள்*

இந்தியச் சட்டசபைகளில் பொதுமக்கள் சபை அல்லது பார்லிமெண்டுக்கும், மாகாணசபைகளில் பொது மக்கள் சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை வயதுவந்த எல்லா ஆண்பெண்களுக்கும் உண்டு. மேல் சபைகள் கல்வி, கலை, தொழில், ஊராட்சி முதலிய துறைகளில் சிறந்த மேதைகளுக்கு இடம் அளிப்பதற்காகவும், மக்கள் சபையின் செயல்களை நுணுக்கமாக ஆராய்வதற்குப்பொதுமக்களின் சபையினராலும், மக்கள் சபை உறுப்பினராலும், சிறப்பான கல்வி முதலிய உரிமைகள் பெற்றவர்களாலும் தேர்தெடுக்கப்படும் சபைகள் அமைந்தன.

இந்திய அரசியலின் நிர்வாகம் அமைச்சவைக்குரியது. மக்கள் சபையில் வாக்குப் பல முள்ள பெரும்

*நிர்வாகம் அமைச் சபை*

பான்மைக் கட்சியினர் அமைச்சவை அமைப்பார்கள். அதுபோலவே மாகாணங் களிலும் மக்கள் சபையில் பெரும்பான்மை கட்சியினர் மாகாண அமைச்சவை அமைகின்றார்கள். சட்டசபையில் நிறைவேறும் சட்டங்கள் யாவும், இந்திய ஜனாதிபதி, அல்லது மாகாண கவர்னர் ஒப்பம் பெற்றுச் சட்டமாகும். கவர்னர்கள் சட்டசபைகளின் தீர்மானங்களின்படி அமைச்சர்களைக் கொண்டு ஆட்சி நடத்துவார்கள். ஆயினும் சில நெருக்கடிகளில் சட்டசபைகளோ, னநாயக அமைச்சவையோ அமைக்க முடியாத காலங்களில் ஜனாதிபதியின் ஆட்சி நடைபெற இடமுண்டு. சட்டசபைகள் அமையாத காலங்களில் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு.

*நெருக்கடிகள்*

இந்தியா தேசம் முழுவதுக்கும் பொதுவான பாதுகாவல், போக்குவரத்து, தபால் தந்தி, ஏற்றுமதி இறக்குமதி, அந்நிய நாட்டு உறவு, தேச அபிவிருத்தி முதலிய காரியங்களை இந்திய அரசாங்கம் தேசம் முழுவதுக்கும் கவனிக்கிறது. ஆதாரக் கல்வி, சுகாதாரம், நில்வரி, ஊராட்சி, மதுவிலக்கு, நீர்ப்பாசனம், கூட்டுறவு, விவசாயம், முதலிய காரியங்களை மாகாண அரசாங்கம் கவனிக்கிறது.

*அரசியல் பிரிவினை*

நம் நாடு சுதந்தரம் பெற்றது முதல் கைத்தொழில் வியாபாரம், கல்வி அபிவிருத்தி, தொழிற்கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சார அபிவிருத்தி முதலிய துறைகளில் வெகுவாக முன்னேறி யிருக்கின்றது. சிறப்பாக

*சாதனைகள்*

இந்தியஅரசினர் வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டங்கள் சிறந்த ஒரு சாதனையேயாகும்.

நம் நாட்டின் செயல்களையும் நம் தலைவர்களின் நேர்மை, நாணயம், திறமை முதலியவற்றையும் உலகம் வியந்து நோக்கி நன்கு மதிக்கின்றது. நேர்மையுடன் உண்மையை உலகத்துக்கு எடுத்து

உலகமதிப்பு

விளக்க அந்நாளில் புத்தர் பெருமானும் அசோகனும், பின்னர் மகாத்மா காந்தியடிகளும் கையாண்ட அமைதி முறை நம் நாடு கடைப்பிடித்து உலக வல்லரசுகளை அமைதி வழியில் திருப்பச் செய்யும் முயற்சிகள் முழுவெற்றி யாளிக்கின்றன, வென்பதே படைபலமும் பணபலமும் பெருகப் படைத்த இதர நாட்டினர் நம் நாட்டினர்க்கும் தலைவர்க்கும் அளிக்கும் நற் சான்றுகளாம்.

கொரியப்போர் நிறுத்தத்திலும், காஷ்மீரத் தகராறுகளிலும் நம் நாட்டின் அமைதி முறை கண்ட வெற்றியை உலகம் முழுதும் போற்றுகின்றதன்றோ !



உலக அமைதியைக் காக்க அரசாங்கப் பொதுச் சபையாகவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் இந்த ஆண்டுத் தலைவியாக ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதையார் தேர்ந்தெடுக்கப் பெற்றி

ருப்பது இந்திய அறநெறி, அருள், அமைதி, முறைகட்கு உலகம் செலுத்தும் காணிக்கை யன்றே.

இவையனைத்தும் நம் நாடு வாக்குரிமை பெற்றுத் தன்னாட்சி ஏற்றதனால் கிட்டிய பலன்களாகும்.

## 10. ஒற்றை மாற்றுவாக்கு

நம் மாகாண இந்திய சட்டசபைகளுக்குத் தேர்தல் இருவிதமாக நடைபெறுகின்றது. ஒன்று சாதாரணப் பொதுத் தேர்தல். இதில் பெரும்பான்மை வாக்குப் பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள். உதாரணமாக 6700 பேர் கொண்ட வாக்காளர் தொகுதியில் நான்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றார்கள்.

*பொதுத் தேர்தல்*

ஒவ்வொரு வாக்காளரும் நால்வருக்கு வாக்களிக்கலாம். I, II, III, IV, V, VI, VII, என்ற ஏழு அபேட்சகர்கள் தேர்தலில் கலந்து கொள்ளுகிறார்கள். அவர்களுள் I அபேட்சகர் 1800; II 1418; III 1026; IV 980; V 840; VI 800; VII 720. மற்றவை செல்லாதவை. முறையே I, II, III, IV அபேட்சகர்கள் தேர்தல் பெற்றவர்களாக ஏற்கப் பெறுவார்கள். இவர்கள் பிரசாரவலுவால், கட்சி ஆதரவால் அல்லது இதர தந்திரங்களால் தேர்தல் பெறலாம்.

இந்தக்குறைகளைப் போக்க மேல் சபைகட்கு உறுப்பினர் அமைக்கும் வேறு ஒரு தேர்தல்முறை வகுத்துள்ளார்கள். அதற்கு ஒற்றை மாற்று வாக்குத் தேர்தல் முறை எனப் பெயர். இம் முறைப்படி வாக்காளர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்

தான் உள்ளதாகக் கணக்கிடப் பெறும் அது தான் முதல் வாக்கு. அவ்வாறு குறித்த அளவு முதல் வாக்குப் பெறுபவர்கள் தேர்தல் பெற்றவராவார். தமக்கு வேண்டிய அளவுக்கு மேலாக அவருக்குப் பதிவாகியுள்ள முதல்வாக்குகள், பிறருக்குமாறும் ஒரு உதாரணம். ஒரு தேர்தலில் மொத்தம் 5000 பேர் வாக்கு அளிக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப் பெற வேண்டியவர்கள் 7 பேர்கள். இந்த 7 உடன் 1 ஐக் கூட்ட (7+1) 8 ஆகும். $\frac{5000}{8} = 625 + 1 = 626$ முதல் வாக்குகள் பெற்றவர்கள் தேர்தல் பெறுவார்கள். 626-க்கு மேல் ஒருவர் முதல் வாக்குப் பெற்றிருந்தால் அந்த அதிகப்படி முதல்வாக்குகள் அவருடைய வாக்குச் சீட்டுகளில் அடுத்த தரமாக மதிக்கப் பெற்றிருப்பவர்க்கு ஒரு விகிதப் படி மாறும். உதாரணம்:- கந்தன் என்பவர் 728 முதல் வாக்குகள் பெறுகிறார். அவருக்கு வேண்டியது 626 வாக்குகள் தான். அதிகப்படி 728 – 626 = 102 வாக்குகள் உள்ளன. அவற்றை மாற்றலாம். யாருக்கு எப்படி மாற்றுவது? கந்தன் முதல் வாக்குப் பெற்றுள்ள 728 வாக்குச் சீட்டுகளில் இரண்டாந்தரமாக மதிக்கப் பெற்றிருப்பவர் யாவர்? கோபாலன் 302 சீட்டுகளிலும், ராஜராமன் 220 சீட்டுகளிலும், கமலம்மாள் 100 சீட்டுகளிலும் ஜோசப் 106 சீட்டுக்களிலும் இரண்டாந்தரம் பெற்றிருக்கிறார்கள். எனவே,

*ஒற்றை மாற்று வாக்கு*

*வாக்கு மாறுதல்*

$\frac{302}{728} \times \frac{43}{102} = 43$ கோபாலனுக்கும்

$\frac{220}{728} \times 102 = 30$ ராஜாராமனுக்கும்

$$\frac{100}{728} \times 102 = 14$$ கமலம்மாளுக்கும்

$$\frac{106}{728} \times 102 = 15$$ ஜோசப்புக்கும்

கிடைக்கும்.

இந்நிலையில் முதல் எண்ணிக்கையில் கோபாலன் 510, ராஜாராம் 605, கமலம்மாள் 615, ஜோசப் 418 முதல் வாக்குகள் பெற்றிருக்கிறார்கள் எனக் கொள் வோம். அவற்றோடு கந்தனின் மீதிவாக்குப் பங்கீட்டைக்

| | |
|---|---|
| கோபாலன் | 510 + 43 = 553 |
| ராஜாராமன் | 605 + 30 = 635 |
| கமலம்மாள் | 615 + 14 = 629 |
| ஜோசப் | 418 + 15 = 433 |

கூட்டமுதல் வாக்குகளும் பெறுகின்றார்கள்.

இப்போது 626-க்கு மேல் முதல் வாக்குப் பெற் றுள்ள ராஜாராமன், கமலம்மாள், அவர்கள் தேர்தல் பெறுகிறார்கள். இம்மாதிரி எண்ணிக் கொண்டே போய்த் தேர்தல் பெற இடமில்லை என்று விலக்கப் பெறுபவர் களுடைய முதல் வாக்குகள் அடுத்தபடி அதிக முதல் வாக்குப் பெறுபவர்களுக்கு மாறும். இதன்படி நிச்சயமா கத் தேர்தல் பெறுபவர்கள் பெற்றுள்ள அதிகப்படி வாக்கு கள் அவருக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகள் பெற்றி ருப்பவர்கட்கு இறங்கு வரிசையிலும், நிச்சயமாகத் தேர் தல் இல்லை என்று முடிவு செய்யும்படி குறைவாக முதல் வாக்குப் பெறுபவர்களுடைய எல்லா முதல் வாக்கு களுக்கும் அவருக்கு மேல் அடுத்தபடி அதிக வாக்குள்ள வருக்கு ஏறு வரிசையிலும் மாறும்.

இதன் விவரங்களெல்லாம் தேர்தல் அதிகாரிகள் நன்கு வகுத்துள்ளார்கள். நம் நாட்டில் தேர்தல்களைக் கவனிக்க ஒரு சபை யுண்டு

இம் முறையின் தன்மைகளும் நன்மைகளும்

(1) ஒவ்வொரு வாக்காளர்க்கும் ஒரே வாக்குதான் உண்டு. அதுதான் முதல் வாக்கு.

(2) அந்த முதல் வாக்கு மாறுந் தன்மையுடையது.

(3) முதல் வாக்கு வீணாகாமல் மாறியோ அல்லது மாருமலோ பயன் பெறும் வகைக்கு வாக்களிப்பவர், 1-க்கு அடுத்த தரங்களையும் மதிப்பிட வேண்டும்.

(4) மாறும் தன்மை பெற்றிருப்பதால் வாக்குகள் சேதமாவதில்லை.

(5) சாதாரணத் தேர்தலில் உள்ள கட்சி கட்டுப் பாடு, பிரசாரத்தொல்லை முதலியன இத் தேர்தலில் இல்லை.

(6) சாதாரணத் தேர்தலில் போட்டியும் பகையும் குறுக்கிடலாம். ஆனால் இத் தேர்தலில் ஒருவர்க் கொரு வர் உதவியாக இருக்க முடியும்.

# 11. முடிவுரை

இது காறும் வாக்கு என்பது இன்ன தென்றும் பொதுவாக அதன் பொருளையும் சிறப்பாக அரசியலில் அதன் வன்மையையும் பற்றி அறிந்தோம். உலக நாடுகள் பலபடைதிரட்டி அரசருடன் போர்புரிந்து, பெற்ற உரிமையை நம் நாடு மகாத்மா காந்தி மகான் காட்டிய அமைதிவழி அன்புவழியாகவே யடைந்தது. நம் நாட்டை விட்டு ஆங்கிலேயர் தாமாகவே வெளியேறினார்கள். அதனால் நம் நாட்டுக்கும் இங்கிலாந்துக்கும் என்றென்றும் மாருத நல்லுறவும் நல்லுணர்வும் நிலைத்து நீடிக்க இடம் ஏற்பட்டது. நம் அறப்போர் முறைகட்கும் அமைதிகாக்கும் தன்மைக்கும் உலகிலேயே ஓர் உயர்வும் மதிப்பும் ஏற்பட்டிருக்கின்றன. குழவிப் பருவத்திலிருக்கும் நம் குடியரசு, செழித்தோங்கிவாழ ஆண்டவன் வரந்தருவாளுக!

கல்வி, கலை, கைத்தொழில், வாணிபம் முதலிய எல்லாத் துறைகளிலும் நம் நாடு தலைசிறந்து விளங்க நாம் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். அது வாக்குரிமை பெற்ற சமூகத்தின் சீரிய கடமைகளுள் ஒன்றாகும். நம்மைப் போல எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே நம் எண்ணமும் கருத்துமாக வேண்டும்.

நாட்டுப் பற்றும் இனப் பற்றும் மிகுந்து நாட்டு நலம் இன நலம் கருதியே நாம் மேற் கொள்ளும் முயற்சிகள் யாவும் அமைய வேண்டும். நமக்கும் பிறர்க்கும் இடர் தவிர்த்துப் பயன் தரும் வகையில் நாம் இவ் வையத்து வாழ்வாங்கு வாழ்வோமாக!

வாழ்க நம் குடியரசு

# 12. பயிற்சிகள்

## அத்தியாயம் 1, 2

1. "வாக்கு" என்ற சொற் சிறப்பை ஒருபக்க அளவில் விளக்குக.
2. "பலர் வாக்குப் பெறுதல்" என்பதன் தொன்மையையும், சிறப்பையும் குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. "ஒற்றுடல்" "நகரி சோதனை" என்பன யாவை? அவற்றை முன்னுளைய அரசர்கள் மேற்கொண்டது ஏன்?

## அத்தியாயம் 3, 4

4. "மாறூர்" கொல்லூர் மடம்" கல்வெட்டுக்கள் அன்னுளில் கிராம ஆட்சியைப்பற்றிக் கூறுவதென்ன?
5. "அம்பலம்" "பொதுவல்" "குடவோலை" "கச்சம்" "வாரியர்" "பெருங்குறி" இவை ஒவ்வொன்றும் பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.

## அத்தியாயம் 5

6. "அரசர்கள் தங்கள் காரியங்கள் அனைத்திலும் அமைச்சர்களையும், பிறரையும் கலந்து செய்வார்கள்" என்பதைக் கம்பர் காவியத்தில் கூறும் ஒரு நிகழ்ச்சியால் விளக்குக.
7. அயோத்தி அமைச்சர்களின் தன்மை எவ்வாறு விவரிக்கப் பெற்றுள்ளது?
8. எந்தெந்தக் காரியங்களுக்காக அரசர்கள் பிறரை அழைத்து ஆலோசனை கேட்டு வந்தார்கள்.?
9. "ஐம்பேராயம்" "எண்பேராயம்" "அஷ்டப் பிரதமர் சபை" குறிப்புகள் வரைக.

## அத்தியாயம் 6, 7

10. ஸெயிண்ட் எட்மண்ட்ஸ்பரி தேர்தல் பற்றி ஒரு கட்டுரை வரைந்து அதன் சிறப்பை எடுத்துக் காட்டுக.
11. திருவெண்ணெய் நல்லூர் பித்தருக்கும், நாவலூரருக்கும் நடந்த வழக்கும் அதன் தீர்ப்பும் பற்றி எழுதுக.

## அத்தியாயம் 8

12. 1215 மகாசாசனம் முதல் 1265 பாராளுமன்றம் வரைஇங்கிலாந்து வாக்குரிமைப் போர் பற்றி எழுதுக.
13. முதலாம் ஜேம்ஸ் அரசர் காலம் முதல் 1688 வரையில் மக்கள் வாக்குரிமைப் போராட்டம் பற்றி எழுதுக.
14. இங்கிலாந்தில் கட்சியாட்சி அமைப்பும், மந்திரிசபைக் கூட்டுப் பொறுப்பும் பற்றி எழுதுக.

15. இங்கிலாந்தில் வாக்குரிமை வளர்ச்சி பெருக்கம் பற்றி எழுதுக.
16. தற்கால இங்கிலாந்தின் அரசியல் அமைப்புப் பற்றி எழுதுக.
17. அமெரிக்க மக்கள் வாக்குரிமை பெற்ற வரலாறு யாது ?
18. பிரெஞ்சுக் குடியரசின் தன்மைகள் யாவை ?
19. காங்கிரஸ் தோன்றுமுன் நம் நாட்டில் நடந்த வாக்குரிமைப் போர்கள், கிளர்ச்சிகள் பற்றி சுருக்கமாக எழுதுக.
20. 1857 வருஷத்திய கிளர்ச்சியின் தன்மைகள், விளைவுகள் யாவை ?
21. வீரபாண்டிய கட்டபொம்மன், நாறுபத்மநாபர், ஜான்சி ராணி, இலட்சுமி பாய் இவர்கள் நாட்டு விடுதலைப் போராற்றிய விவரம் குறிப்பிடுக.
22, காங்கிரஸ் தோன்றிய காலத்தில் அதன் செயல்களும் நோக்கங்களும் பற்றிக் கூறுக.
23. சுதேசி இயக்கம், ஹோம்ரூல் கிளர்ச்சி என்பன நம் நாட்டு விடுதலை இயக்கங்கள் என்பதை விளக்குக.
24. திலகர் முதலிய தீவிரவாதிகளின் நோக்கமும், கோரிக்கையும் பற்றிக் கூறுக.
25. மகாத்மா காந்தியடிகள் மேற்கொண்ட அறப் போர் முறை என்ன ?
26. "உப்பு சத்தியாக்கிரஹம்" "ஒத்துழையாமை இயக்கம்" பற்றி எழுதுக.
27. இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப்பின் வெள்ளையர் நம் நாட்டைவிட்டு வெளியேறும் வரையில் நம் உரிமைப் போர் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
28. நம் நாட்டின் சுதந்திரப் போர் முறைகளுக்கும் இதர நாடுகளின் முறைகளுக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை ?
29. "இந்திய தேசீயப் படை" "ஜான்ஸி ராணி மாதர்படை" பற்றி எழுதுக.
30. "சுபாஷ் சந்திரபோஸ்" நாம் நாட்டு விடுதலைக்காகச் செய்த முயற்சிகள் யாவை ?
31. "வெள்ளையரே வெளியேறுக" என்ற தீர்மானத்தின் வரலாறு, பயன், ஆகியவற்றைத் தொகுத்துக் கூறுக.

## அத்தியாயம் 9, 10

32. நாமே நம் அரசியலை வகுத்துக் கொண்ட வரலாறு கூறுக.
33. "ஒற்றை மாற்று வாக்கு தேர்தல்" "பொதுத் தேர்தல்" பற்றி சுருக்கமாக எழுதுக.

## அத்தியாயம் 11

34. நம் நாடு ஆட்சி உரிமை பெற்ற பின் அடைந்துள்ள சிறப்புகள் பற்றி வரைக.